
www.tamilarangam.net

# சிந்தனை

பங்குனி

1993






- திருப்திப்படுத்தாத தீர்வுகள்
- பட்டதைச் சொல்வேன்
- பெண் ஒடுக்குமுறை. ............
- காலனித்துவ ஆக்கிரமிப்பு
- சோமாலியா
- இலக்கியச்சந்திப்பு
- அயோத்தியும் ஆளும்வர்க்கங்களும்
- எண்ணங்கள்
- நீலப்பட்சி
- முஸ்லீம் அகதிகள்
- ஜேர்மனியில் நாசிகள்
- ஐரோப்பாவில் போர்
- ஒட்டுத்துணியும் மேலாடையும்


RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE FRANCE

SINTHANAI 1/93

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை



ஆரம்பம் 1985

சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகின்றது.

**1 / 93**

*15/03/1993*

ஆறு இதழ்களுக்கான சந்தா 20 டி.எம்.

தொடர்புகளுக்கு

SINTHANAI
HAUSSMANNSTR.107,
7000 STUTTGART 1
GERMANY



## மனம் தளராத இடதுசாரி

இலங்கையின் மூத்த இடதுசாரிகளில் ஒருவரான என்.சண்முகதாசன் கடந்த பெப்ரவரி 8ம் திகதி காலமானார். இளம் வயதில் தான் தேர்ந்தெடுத்த கொள்கைக்காக தனது வாழ்நாள் முழுவதையும் அற்பணித்தவர் அவர்.

எந்த வித இடர்களாலும் மனம்தளராத ஒரு இடதுசாரியாக இறுதி வரை வாழ்ந்த ஒருவருக்கு எமது அஞ்சலிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருப்திப்படுத்தாத தீர்வுகள்

தினம்,தினம் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள் புனிதமான உபதேசங்களைத் தாங்கித்தான் வெளிவருகின்றன. " சமாதானத்திற்கான சகல முயற்சிகளையும் செய்கிறேன்.. ........பிரச்சனைகளுக்கான உங்கள் தீர்வுகளை முன் வையுங்கள்...." இதைச் சொல்லுபவர் நாட்டின் சர்வ வல்லமை படைத்த ஜனாதிபதி. நாட்டின் போரையும் சமாதானத்தையும் தீர்மானிக்கும் பதவியில் இருப்பவர். ஆனால் இவரினால் எந்தத் தீர்வையும் மக்களுக்கு அளிக்க முடியவில்லை. .......மற்றவர்களிடம் தீர்வுகளை எதிர்பார்ப்பவர்கள் ஏன் ஆட்சி பீடத்தில் ஒட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் மக்களுக்கு விளங்காத புதிர்!

தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுகளுக்கோ என்றும் பஞ்சம் இருந்ததில்லை. அந்தத் தீர்வுகளை நடை முறைப்படுத்துவதற்கான நல்லெண்ணங்கள் தான் என்றும் இருந்ததில்லை.

தனிச்சிங்களச்சட்டத்திற்கும் ஒரு நியாயமான தமிழ் உபயோகம்...இன்று ஏட்டளவில் மூன்று மொழிகளுக்குச் சமஅந்தஸ்து............ நடைமுறையில் ஒன்றுமில்லை...


பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் பிரதேச சபைகள்................................

டட்லி - செல்வா இரசிய ஒப்பந்தத்தில் மாவட்ட சபைகள். இவை மலட்டு மாவட்ட சபைகளாகவே அழிந்து போயின..

மாகாணசபைகள் மூலமாக ஒரு தீர்வு.................... இன்னும் சட்டப்புத்தகத்தில் இருக்கும் ஒரு தீர்வு.................... அதற்கான அதிகாரங்களைக் கொடுக்காது அதைக் கலைத்தவர் தற்போதைய ஜனாதிபதி..........................

இப்பொழுது தெரிவுக் குழுவாம்.............................. இந்த குழுவுக்குக் கூட அவர் எந்தத் தீர்வையும் முன்வைக்கவில்லை.

.....எந்தத் தீர்வையும் நடைமுறைப்படுத்தாத பேரினவாத ஆளும் கட்சிகளின் நடை முறைகள் தான் தொடரும் இரத்த வரலாறுக்கான காரணங்கள்... முடிவில்லாத ஒரு யுத்தம் 50,000 உயிர்களைப் பலி கொண்டுள்ளது. இந்த யுத்தத்தை நடத்துவதற்கு கடந்த வருடத்தில் மட்டும் அரசிற்கு 20 பில்லியன் ரூபாய்கள் செலவாகியுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 86 பில்லியன் ரூபாய்களை "பாதுகாப்பு" என்று யுத்தத்திற்காக அரசு செலவழித்துள்ளது.




(நன்றி : சரிநிகர் )

www.tamilarangam.net

ஏழு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தமது வீடு வாசல்களை இழந்து அகதிகளாகி உள்ளனர். இந்த மக்களுக்கு போதியளவு உணவோ, மருந்து வகைகளோ கொடுக்க வக்கற்றது இருக்கின்றது அரசாங்கம்.

யுத்த பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கும் வட - கிழக்கு மாகாணங்கள் மீதான பொருளாதாரத் தடையினால் இன்று தமிழ் மக்கள் பட்டினியின் வரம்பிற்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். 90%மான குழந்தைகளும், 60%மான தாய்மார்களும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். பசி, பட்டினி, மரணம் .... இவற்றை எதிர் நோக்கும் மக்களுக்கு ஒரு சமாதான வாழ்வு, தத்தமது தொழில்களில் ஈடுபடக் கூடிய சூழ்நிலைமைகள், தாய்மாருக்கும் பிள்ளைகளுக்கும் தேவையான ஊட்ட சக்தியுள்ள உணவுகள்...வருங்கால சந்ததிக்கான கல்வி.... இவை எல்லாவற்றையும் சாதாரண மக்கள் எதிர் பார்க்கின்றனர்.............. இவற்றிற்கு வழிவகுக்கும் தீர்வுகளை அவர்கள் எதிர் பார்க்கின்றனர்.................

முடிவற்ற யுத்தத்தைத் தொடருபவர்களினால் இவற்றில் எதையுமே கொடுக்க முடியாது............... அகதிகளான மக்களுக்கு மேலும் அல்லல்களைத்தான் இந்த யுத்தத்தைத் தொடருபவர்களினால் கொடுக்க முடியும்.

அரச படைகளின் நிர்ப்பந்தங்களினால் தமது வசிப்பிடங்களில் இருந்து வெளியேறிய தமிழ் மக்களின் வீடுகளிலும் காணிகளிலும் அரச அனுசரணையுடன் பெரும்பான்மையின மக்கள் குடியேற்றப்படுகின்றனர். இந்த மக்கள் தமது வசிப்பிடங்களுக்கு என்றுமே திரும்பமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். யுத்த நிலைமைகளில் அரசின் திட்டமிட்ட குடியேற்றங்கள் கிழக்கு மாகாணத்தில் தொடருகின்றன. இவற்றின் மத்தியில்..........................

தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்போம் என்ற மாய்மாலம் தொடருகின்றது. ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி எந்தவித தீர்வையும் வைக்க விரும்பாது காலத்தைக் கடத்துகின்றது. மறுபுறத்தில் பிரதான எதிர்க் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆளும் கட்சிக்குக் குறையாத இனவாதக் கொள்கைகளுடன் இனப்பிரச்சனைக்கான தீர்வை குழப்புவதிலேயே கண்ணாக இருக்கின்றது. மொத்தத்தில் இந்த இரு கட்சிகளும் தங்கள் கடந்த கால அரசியலைத்தான் இன்றும் தொடருகின்றன. தமிழ் மக்களின் - நாட்டின் - பிரச்சனைகளை தீர்ப்பதில் அவர்களுக்கு எந்த வித அக்கறையும் இல்லை என்பதுதான் உண்மை - எவர் எந்த வகையில் ஆட்சி பீடம் ஏறுவது என்பதுதான் அவர்களின் அடிப்படையான நோக்கமாகும்.

தமிழ் குழுக்களினால் முன் வைக்கப்பட்ட நான்கு அம்சத் திட்டம் பற்றி அவை எந்தவித அபிப்பிராயத்தையும் வெளியிடவில்லை....

தொண்டமானின் தீர்வு யோசனைகள் பச்சை இனவாதப் பிரசாரங்களினால் பின் தள்ளப்பட்டன. ஆனால் வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் ஸ்ரீனிவாசனின் யோசனையை குப்புற விழுந்து ஆதரித்தார்கள்..ஆனால் சமஷ்டி என்ற சொல்லைக் கண்டு மறு நாள் குத்துக்கரணம் அடித்தார்கள்!

பிரபாகரன் பி.பி.சி க்கு அளித்த பேட்டியில் சமஷ்டியின் அடிப்படையில் அரசாங்கம் தீர்வினை முன்வைத்தால் அதைக் கருத்திலெடுக்கத் தயார் என்று கூறியுள்ளார்....ஆனால் அரசாங்கத்திடமிருந்தோ அல்லது அதன் தெரிவுக் குழுவிலிருந்தோ இன்னும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் எந்தவித யோசனைகளும் வெளிவருவதாக இல்லை. யுத்தத்தைத் தொடருவதிலும், திட்டமிட்ட குடியேற்றங்களைத் தொடருவதிலும் ஆளும் கட்சிக்கும் , பிரதான எதிர்க் கட்சிக்கும் காணப்படும் ஒற்றுமையைப் போலவே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிராகரிப்பதிலும் இருக்கின்றது.

இந்த இரு பகுதியினராலும் ஏற்றுக் கொள்ளப்படும் தீர்வுகள் எவ்வாறு தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்த முடியும்.?

இந்த நிலமைகளிலேயே தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளும் இயக்கங்களும் தமது கடந்த கால் - நிகழ்கால நடவடிக்கைகளை மீளாய்வு செய்ய வேண்டியுள்ளது. பொன்னம்பலம் தலைமையிலிருந்து பிரபாகரன் தலைமை வரை ஆளும் கட்சிகளுக்கு முண்டு கொடுப்பதும், சமரசம் பேசுவதன் மூலம் தான் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயன்றுள்ளன. இது அவர்களின் வர்க்க குணாம்சங்களை வெளிக் காட்டியுள்ளன. இந்த சமரசங்கள் இவர்களின் நலன்களைப் பாதுகாத்தனவே அன்றி தமிழ் மக்களின் நலன்களை பாதித்தே இருக்கின்றன.

இவர்கள் இது வரைகாலமும் தொடர்ந்த அரசியலுக்கு அப்பாலும் ஒரு அரசியல் உண்டு என்பதை மக்கள் உணர வேண்டும். தம்மை தமிழ் முற்போக்கு வாதிகள், இடதுசாரிகள் என்று கூறிக் கொள்ளுபவர்கள் இன்னும் இந்த உயர் வர்க்க நலன் காக்கும் தேசிய அரசியலுக்குள் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வினைத் தேடுவது அவர்களின் வர்க்க நிலைப்பாடுகளைக் கேள்விக் குள்ளாக்குகின்றது. சாதாரண சிங்கள மக்களின் நலன்களைப் பேணும் அரசியலுடன் பின்னிப்பிணைந்ததுதான் தமிழ் மக்களின் நலன் பேணும் அரசியலும். இந்த மக்களைப் பிரித்தாளும் வர்க்கங்களின் அரசியல் தொடரும் வரை எந்த விதமா தீர்வுகளும் ஏற்படப் போவதில்லை. ஆளும் வர்க்கங்களினால் ஒடுக்கப்படும் சக்திகளுடன் இணைந்த அரசியலை முன்னெடுக்க தமிழ் அரசியல் குழுக்களும் தமிழ் மக்களும் முன்வரவேண்டும்.

அவ்வாறான அரசியலில் இருந்து இயக்கங்களும் மக்களும் அன்னியப்பட்டு இருக்கும் வரைக்கும் திருப்திப்படுத்தாத தீர்வுகளைத்தான் தமிழ் மக்கள் சந்திக்க வேண்டிவரும்.



www.tamilarangam.net

# பட்டதைச் சொல்வேன்

– காளமேகம்

சர்வதேச மன்னிப்புச்சபை கடந்த பெப்ரவரி மாதம் ஸ்ரீலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுதல் சம்பந்தமாக ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அரசாங்கம், அரசாங்கத்துடன் இணைந்த ஆயுதக் குழுக்கள், புலிகள் ஆகியோருடைய மனித உரிமை மீறல்களை இந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. அரசாங்கத்தின் கண் துடைப்பு நடவடிக்கைகள் பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்த போதிலும் தொடர்ச்சியாக நடத்தப்படும் சுற்றி வளைப்புக்களில் கைது செய்யப்படுவோர் காணாமற் போவது பற்றியும், கைது செய்யப்பட்டவர்கள் மீது நடத்தப்படும் சித்திரவதைகள் பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் மீது அரச படைகளும், ரெலோ, புளொட் ஆயுதபாணிகளும் சித்திரவதைகளை மேற் கொள்வதாகத் தகவல்கள் வெளியிட்டுள்ளது. பலமாக அடித்தல், மின்சார அதிர்ச்சி கொடுத்தல், சிகரட் அல்லது தீக் குச்சிகளினால் எரித்தல், மூக்கினில் பெட்ரோலை ஊற்றி பிளாஸ்டிக் பைகளினால் முகங்களை மூடுதல், பெரு விரல்களில் கட்டித் தூக்கி விட்டு அடித்தல், தலை கீழாகத் தூக்கி தலையை தண்ணீருக்குள் அமிழ்த்துதல் போன்ற சித்திரவதைகளை அட்டவணைப்படுத்தியுள்ளது. பெண்கள் இராணுவத்தினால் பலாத்காரப்படுத்துவதையும் குறிப்பிட்டுள்ளது.

செஞ்சிலுவைச்சங்கம், மற்றும் மனித உரிமைக் குழுக்கள் ஆகியவற்றிற்கு காட்டப்படாமலேயே பல கைதிகள் வைக்கப்பட்டிருப்பதாகவும், காட்டப்படும் கைதிகள் கூட உண்மைகளைச் சொல்லக் கூடாதென மிரட்டப்படுவதாகவும் அறிக்கை கூறுகின்றது. ஆயுதபாணிகளினால் தான்தோன்றித்தனமாகச் செய்யப்படும் கொலைகளின் பட்டியலில் கரபொல, முத்துகல, அலஞ்சிபத்தன, மலியந்தனை ஆகிய இடங்களில் இராணுவத்தினராலும் புலி இயக்கத்தினராலும் செய்யப்பட்ட கொலைகளின் விபரங்கள் அடங்கியுள்ளன.

வட பகுதியில் புலி இயக்கத்தினரால் 06.07.92 அன்று நடத்தப்பட்ட பகிரங்கப் படுகொலைகளை கீழ் கண்டவாறு விபரிக்கின்றது இந்த அறிக்கை:-

" ஆயுதம் தாங்கிய புலி இயக்கத்தினர், இரண்டு பெண்கள் உட்பட பத்துக் கைதிகளை பரந்தன் சந்திக்குக் கொண்டு வந்தனர். வடக்கிலிருந்து கொழும்பு செல்வதற்காக அந்த வழியால் பிரயாணம் செய்த பெரும் தொகையான மக்கள் அங்கு கூட்டப்பட்டு நடவடிக்கைகளைப் பார்ப்பதற்கு நிர்பந்திக்கப்பட்டனர். இந்தக் கைதிகள் இராணுவத்தினருக்குத் தகவல் கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். வண்டிகளிலிருந்து இறக்கப்பட்ட கைதிகள், அங்கே ( அவர்களுடைய இரத்தம் மண்ணை மாசுபடுத்தக் கூடாது என்பதற்காக ) போடப்பட்டிருந்த மண் மூடைகளின் மேல் நிறுத்தப்பட்டனர். அவர்கள் தாங்கள் செய்த குற்றங்களைக் கூறும்படி பணிக்கப்பட்டனர். இரு கைதிகள், விசாரணையின் போது தாங்கள் தாக்கப்பட்டதாலேயே குற்றங்களை ஒப்புக் கொண்டதாகக் கூறிக் கொண்டிருந்த பொழுது புலித் தலைவன் சுடுமாறு கட்டளையிட்டான். பத்துப் பேரும் முதுகில் சுடப்பட்டனர். சுடப்பட்ட ஓமந்தையைச் சேர்ந்த நாகராஜா என்பவரின் உடலில் இருந்து தலையை புலித்தலைவன் வெட்டி எடுத்தான். அந்தத்தலை ஒரு பெட்டியில் போடப்பட்டு அங்கு நின்ற ஒரு பெண் பிராயாணியிடம் கொடுக்கப்பட்டு, அதை வவுனியாவிலுள்ள இராணுவ முகாம் காவலாளியிடம் கொடுக்குமாறு பணிக்கப்பட்டார். புலிகள் அந்தப் பெண்ணிடம் இருந்த ஆவணங்களை எடுத்துக் கொண்டனர். அந்தப் பெண்ணுக்கு அந்தப் பெட்டியை இராணுவ முகாமில் கொடுத்து விட்டுத் திரும்பி வந்து தனது ஆவணங்களைப் பெறுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. புலிகள்

www.tamilarangam.net

மற்றவர்களின் சடலங்களை எடுத்துச் சென்றனர்.

யாழ்ப்பாண விலைவாசிகள் பற்றிய கடிதம் ஒன்றிலிருந்து——

—— யாழ்ப்பாணத்தில் அரிசிக்குப் பெருந்தட்டுப்பாடு. ஒரு கிலோ அரிசி ரூ.52/- க்கு கூட கிடைப்பதாக இல்லை. சனம் கோதுமை மாவையே இரண்டு நேரத்திற்கு பிட்டோ, இடியப்பமோ, ரொட்டியோ செய்து சாப்பிடுகினம். ஒரு போத்தல் மண்ணெண்ணெய் ரூபா.140/-க்கும் , ஒரு போத்தல் தேங்காய் எண்ணய் ரூ.120/-க்கும் விற்பனையாகிறது. ஊர் மாலை ஆறு மணியுடன் உறங்கி விடுகின்றது. இரவில் வீடுகளில் வெளிச்சத்தையே காணமுடிவதில்லை. மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு உண்டு. குழந்தைகளுக்கான பால் மா அறவே கிடையாது. தேங்காய் ரூ.25/-க்கு விற்பனையாகிறது. பாண் விலை ரூ7.50. ——

எந்தவிதமான வருமானமும் இல்லாமல் வாழும் மக்கள் பட்டினிச் சாவைத் தவிர வேறு எதைச் சந்திக் முடியும்.

சர்வதேசத் தமிழர்களினால் மறக்கப்பட்டவர்களாக வாழும் கிழக்கு மாகாண தமிழ் அகதிகள் பற்றிய விவரணப்படம் ஒன்றைச் சமீபத்தில் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நீண்ட நாட்களாக அகதி வாழ்க்கைக்கு முகம் கொடுத்துக் கொண்டு வாழும் இந்த மக்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் "அரை "உதவியைத் தவிர வேறு எதுவும் கிடையாது. தமது கிராமங்களில் மீளக்குடியமரப் பயந்த நிலமைகளில் இந்த மக்கள் தொடர்ந்து வருடக் கணக்காக அகதி முகாம்களில் வாழுகின்றார்கள். தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள கசப்பான பகைமை, கிராமங்களில் புலிகளின் நடவடிக்கைகளை அடக்குவது என்ற போர்வையில் இராணுவ அட்டூளியங்கள் நடைபெறலாம் என்ற பயம்.................. இவையெல்லாம் இந்த மக்களை அகதி முகாம்களுக்குள் நிரந்தரமாக வைத்துள்ளன.

போரினால் விரட்டப்பட்டு, களைப்படைந்து, முகமிழந்து வாழும் இந்த மக்களுக்கு வேண்டிய தீர்வு எல்லாம் தங்கள் வீடுகளில் வாழ்ந்து, வயல்களில் தொழில் செய்து சுதந்திரமாக வாழ்க்கையை நடத்துவதுதான்.

பாரீசில் நடை பெற்ற 14வது இலக்கியச்சந்திப்பு பற்றிய அறிக்கைகளும் விமர்சனங்களும் பல பத்திரிகைகளில்



வெளிவந்துள்ளன. கேர்ணவில் நடைபெற்ற "இலக்கியச்சந்திப்பு மீளாய்வு"க் கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அந்தக் கூட்டத்தில் ஒரு வருடத்திற்கான "இணைப்புக்குழு" ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. அந்தக்குழுவிற்குக் கொடுக்கப்பட்ட பல கடமைகளுள், ஒவ்வொரு இலக்கியசந்திப்பு நடைபெற்ற பின்பும் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்பதும் ஒன்றாகும். ஆனால் இந்தக் குழு அங்கத்தவர்கள் இதுவரை எந்த அறிக்கையையும் சமர்ப்பித்தது கிடையாது. வேறு நூல் வெளியீடு, மலர் வெளியீடு எனப்பல கடமைகள் கொடுக்கப்பட்டன! அடுத்த இலக்கியச்சந்திப்பிலாவது இக்குழுவினர் தங்கள் கடமைகளை ஏன் நிறைவேற்றவில்லை என்பதற்கு விளக்கம் கொடுக்க வேண்டும்.

பாரீஸ் இலக்கியச்சந்திப்பு வெற்றிகரமாக நடைபெற்ற சந்திப்பு என்று சொல்வதானாலும் சில விமர்சனங்களை வைக்க வேண்டியுள்ளது. பாரீசில் முன்னர் நடைபெற்ற ஒன்று கூடல்கள் ( உ+ம். என்எஸ்எம்.இராமையா, ரஜனி திராணகம நினைவுக் கூட்டங்கள்) போலல்லாமல் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை ஒழுங்கு பேணப்பட்டு முற்றுப் பெற்றது. இதற்கு அடிப்படையான காரணம், இலக்கியச்சந்திப்பு - ஒரு மேடைப் பேச்சாளனும் மிகுதிப்பேர் பார்வையாளர்கள் என்று இல்லாமல்,- எல்லோரும் பங்கு கொள்ளும் ஒரு கலந்துரையாடலாக நெறிப்படுத்தப்படுவதேயாகும். இந்த நடைமுறையில் இருந்து

www.tamilarangam.net

மாறும் போதெல்லாம் குழப்ப நிலை ஏற்படும் சாத்தியக்கூறுகள் தோன்றின. இவற்றிற்கு அமைப்பாளர்களே பொறுப்பானவர்கள்.

15 நிகழ்ச்சிகளையும் 40க்கு மேற்பட்ட பேச்சாளர்களையும் நிகழ்ச்சிநிரலில் போட்டுப் பின்பு மற்றவர்களுக்கும் பேச நேரம் தேடும் பொழுது............................" பேச்சாளர்களின் பட்டியலைப் பார்த்த பொழுது எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், கமலகாசன் ஆகியோர் பல வேடங்களில் நடிப்பது ஞாபகம் வந்தது.

ஐரோப்பிய இலக்கியம் —— Mr.X, Mr.Y, Mr.Z
மாசுபடும் சூழல் ——Mr.X, Mr.Y, Mr.Z
மாஸ்ரிச்ட் ——Mr.X, Mr.Y, Mr.Z
இவர்களுடன் இன்னும் சிலர் ————
இப்படிப் பல நிகழ்ச்சிகள்.

மறுபுறத்தில் இலக்கியச்சந்திப்பில் அனுபவமுடைய குழு அங்கத்தவர்கள் கலந்துரையாடல்களை நெறிப்படுத்தாமல் இலக்கியச்சந்திப்புக்கு முதன்முறையாக "விஜயம்" செய்தவர்களிடம் அந்தப் பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டது சில இக்கட்டான நிலைமைகளுக்கு இட்டுச் சென்றது. உதாரணமாக ;

புலிஇயக்கத்தைச் சேர்ந்த "சுக்லா" என்பவர் இறுதி நேரத்தில் ,இலக்கியச்சந்திப்பில் "போராட்டம்" பற்றி பல விமர்சனங்கள் வைக்கப்பட்டதாகவும் அவற்றிற்குப் பதிலளிக்க தமக்கு பத்து நிமிடங்கள் தர வேண்டும் அல்லது பேசியவர்கள் பேசியவற்றை மீளப் பெற வேண்டும் என்ற கோரிக்கை (!) வைத்த பொழுது, கலைச்செல்வன் சாமர்த்தியமாக நிலமையைக் கையாண்டார். இதனுடன் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் நெறிப்படுத்திய நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட தளர்வு நிலைகளை ஒப்பிட வேண்டும்.

இலக்கியச்சந்திப்பு பற்றி சமர் ஆசிரியர் வைத்திருக்கும் ஒரு முக்கியமான விமர்சனம் - பேச்சுச் சுதந்திரம் இலக்கியச்சந்திப்பில் இல்லை என்பதாகும். நடைபெற்ற 15 நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் ஒன்றுக்கு மேற்பட்ட தரம் பேசும் சந்தர்ப்பங்களை எடுத்துக் கொண்டவர் அவர் என்பதைச் சமூகம் கொடுத்தவர்கள் அறிவார்கள். ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் நெறிப்படுத்திய நிகழ்ச்சியில் இரண்டாவது முறை பேச ( மற்றும் பலர் பேச இருந்ததால்) இடம் கொடுக்க மறுத்ததால் அவர் தமது "வெளிநடப்பு நிகழ்ச்சியை" நடத்தினார். இறுதி நேரத்தில் அவர் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களுக்குப் பதில் சொல்ல சிறிது நேரம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

ஆனால் அவருடைய கொள்கை விளக்கங்களுக்கு இலக்கியச்சந்திப்பில் தாராளமான நேரம் கொடுக்கப்பட்டது என்பதை மறுக்க முடியாது.

"மறையாத மறுபாதி" கவிதைத் தொகுப்பு பற்றி கலாமோகன் தாயகத்தில் எழுதிய கட்டுரையில்;

" ——— வீட்டில் வேலைகள் அதிகம். சம்பளமில்லாத வேலைகள். இது பற்றி மார்க்ஸ் கூடத் தனது கவனத்தைச் செலுத்தவில்லை என இலக்கிய விமர்சகரும், பொருளாதார ஆய்வாளருமான மு.நித்தியானந்தன் இலக்கியச்சந்திப்பில் ரதியின் "வர்க்கப் புரட்சிக்கூடாகவே பெண்விடுதலை சாத்தியம் என " வைத்த "வைதீக" பார்வை மீது வைத்த குறிப்பில் இருந்து விளங்கிக் கொள்ளலாம்"

எனக் குறிப்பிட்டிருந்தது வேடிக்கையாக இருந்தது.

மார்க்சியம் என்பது ஒரு விஞ்ஞான ரீதியான அணுகு முறை. மார்க்ஸ் எழுதி வைத்தவை மட்டுமல்ல மார்க்சியம். - அதை அதன் பின்பு வந்தவர்கள் தமது தேடல்கள், அனுபவங்கள் மூலம் வளம் படுத்தியுள்ளார்கள்_ வளம்படுத்துகிறார்கள். பெண் ஒடுக்கு முறைக்கான காரணங்களைக் காண நாம் விஞ்ஞான மார்க்சிய முறையில் அணுக வேண்டும்—— அணுக முடியும். வர்க்க ஒடுக்கு முறையின் அடிப்படையில் அமைந்த சமுதாய அமைப்பில் சகல ஒடுக்கு முறைகளும் அதன் விளைவாகத்தான் உருவாகின்றன. பிரதான ஒடுக்கு முறைக்குத் தீர்வு காணும் பாதையில் தான் மற்றைய ஒடுக்கு முறைகளுக்கு எதிரான பாதைகளும் அமைய முடியும். இது வைதீகப் பார்வையென்றால் — ?

அமெரிக்க கறுப்பின மக்களின் விடுதலை நட்சத்திரமாக உதயமாகிய Malcolm X 1965 பெப்ரவரி மாதம் 21ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். 28 வருடங்களுக்குப் பின்னும் அவரின் விடுதலைக் குரல் எதிரொலிக்கின்றது. ஸ்பைக் லீயின் Malcolm Xபற்றிய திரைப்படம் இன்று இளைஞர்கள் மத்தியில் அவர் பற்றிய புதிய கலந்துரையாடல்களுக்கு வித்திட்டுள்ளது.

அமெரிக்காவில் ஓமகா -நெவஸ்கா நகரில் 1925இல் பிறந்த Malcolm Little இன் இளமை வாழ்க்கை கறுப்பின மக்களின் சேரிகளில் கழிந்தது. அவரின் தந்தை ஒரு சீர்திருத்த அமைப்பின் தலைவராக இருந்த காலத்தில் கொலை செய்யப்பட்டார். தந்தையின் மரணத்தின் பின்பு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் தாயினால் இளம் Malcolm வளர்க்கப்பட்டான். இனவாதமும் ஒடுக்கு முறைகளும் அவர்களை சமூகத்தின் அதல பாதாளத்திற்குத் தள்ளியது. சேரியின் சண்டியனாக வாழ்க்கையை ஆரம்பித்த இளைஞன் Malcolm சிறையில் தள்ளப்பட்டான்.

சிறைக் கூடம் Malcolm X இன் பல்கலைக்கழகமாக மாறியது. சிறைப் புத்தகசாலையிலிருந்த சகல புத்தகங்களையும் வாசித்தார். சிறிது காலத்தில் அவர் இஸ்லாம் தேசிய இயக்கத்தில்ச் சேர்ந்தார். வெள்ளை இனவாதத்திற்கு எதிராக இஸ்லாமிய மதரீதியான பிரிவினையை இந்த இயக்கம் போதித்தது. கறுப்பின மக்களின் சுய மரியாதை இயக்கமாக இது இருந்ததினால் பல கறுப்பின மக்கள் இதில் இணைந்து கொண்டனர். Malcolm X இந்த இயக்கத்தின் முக்கிய பேச்சாளராகினார்.

1964இல் Malcolm X இந்த இயக்கத்திலிருந்து விலகினார். இதற்கான காரணம் இந்த இயக்கம் கறுப்பின மக்களின் உரிமைகளுக்கான போராட்டங்களில் நாட்டம் காட்டவில்லை என்பதேயாகும். அரசியல் ரீதியாக அமைப்பாகுதலும் அரசியல் நடவடிக்கைகளும் கறுப்பின மக்களின் விடுதலைக்கு அவசியம் என அவர் நம்பினார். அமெரிக்க அரசு ஒரு இனவாத அரசு. அமெரிக்க அரசியல் கட்சிகளினால் விமோசனம் கிடைக்கப் போவதில்லை. கறுப்பின மக்கள், போராட்டத்தின் மூலமே தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். தமது தலைவிதியை அவர்கள் தாமே நிர்ணயிக்க வேண்டும். இந்த கோஷங்களுடன் அவருடைய அரசியல் தொடர்ந்தது. படிப்படியாக சோசலிசக் கருத்துக்கள் அவரைக் கவர ஆரம்பித்தன. அவரின் பேச்சுக்களில் சர்வதேசியம் வெளிப்பட்டது... போரட்டத்தில் ஈடுப்ட்டிருக்கும் ஆபிரிக்க மக்கள், வியடநாம் மக்கள் எல்லோரும் எமது சகோதரர்கள்_ அவர்களின் போராட்டங்களை உதாரணமாகக் கொள்ள வேண்டுமென்றார். அமெரிக்க அரசு, சி.ஐஏ, மற்றைய பிற்போக்கு சக்திகள் எல்லாம் Malcolm X இன் கூட்டங்களில் மக்கள் திரளுவதையும் அவரது அரசியல் வளர்ச்சியையும் அச்சத்துடன் நோக்கின. அமெரிக்கப் பொலிஸ் - எப்பி.ஐ ஆவணங்களில் அவரின் வளர்ச்சி தடுக்கப்பட வேண்டும் என்ற குறிப்புக்கள் இருந்ததாக 20 வருடங்களுக்குப் பின் வெளிவந்துள்ளது. அதிகார வர்க்கம் Malcolm Xஐ தடுத்து நிறுத்தத் திட்ட மிட்டது.

அமெரிக்க ஆபிரிக்கர்களின் ஐக்கியத்திற்கான அமைப்பின் செயற் திட்டத்தினை அறிவிக்க வந்த பொதுக் கூட்டத்தில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ❐

## பெண்கள் மார்க்ஸிடம் இருந்து பெற்றுக் கொண்டது என்ன?

*( ஜேர்மன் சோசலிச பெண்கள் இயக்கத்தின் ஸ்தாபகரான கிளரா செற்கின், முதலாளித்துவப் பெண்ணிலைவாதத்திற்கு மாற்றாக பெண் விடுதலைக்கு மார்க்ஸியமும், வர்க்கப் போராட்டமும் அவசியமான பங்களிப்புச் செய்தன என்பதை வற்புறுத்தினார். அவரின் கருத்துக்களில் சில...... )*

"குடும்பத்திலும் சமூகத்திலும் காணப்படும் பெண்களின் நிலமையானது, மனித ஒழுக்க முறைகளினாலும் தெய்வ ஆணையினாலும் ஏற்பட்டதென்ற மூட நம்பிக்கைகள் உடைத்தெறியப் பட்டுவிட்டன.

குடும்பமானது, மனிதவாழ்வில் காணப்படும் மற்றைய அமைப்புகள், வடிவங்கள் போலவே, பொருளாதார அமைப்பு மற்றும் சொத்து உறவு முறைகளின் மாற்றங்களின் விளைவினால் உருவானது என மார்க்ஸ் விளக்கினார்.

உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியானது பொருளாதார அமைப்பில் முன்னேற்றங்களை ஏற்படுத்துவதுடன் உற்பத்தி முறைகளை மாற்றுவதன் மூலமும் நடைமுறையில் இருக்கும் பொருளாதார உறவுமுறைகளில் முரண்பாடுகளையும் உருவாக்கியது. புரட்சிகரமாக மாற்றப்படும் பொருளாதார நிலமைகளினால் மனித சிந்தனைகளும் புரட்சிகரமாக மாற்றம் பெறுகின்றன. இதனால் மக்கள், பொருளாதார அமைப்புமுறைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப தமது சமூக அமைப்பு முறைகளையும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதனால் தேவையற்றுப் போன சொத்து முறைகளும் மனித உறவுமுறைகளும் அகற்றப்பட வேண்டியவையாகின்றன. இந்த மாற்றங்கள் ஒரு வர்க்கப் போராட்டத்தின் மூலமே சாத்தியமாகும்.........

பெண்களின் சமூக அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரத்திற்கும், நலிவிலிருந்து சந்தோஷமான வாழ்க்கைக்கும் முன்னேறிய கஷ்டங்கள் நிறைந்த பாதையில் பிரகாசமான ஒளியைப்பாய்ச்சியதற்காக மட்டுமல்ல, பெண்கள் இயக்கம், முன் வாழ்ந்த எவரிலும் பார்க்க மார்க்சிற்குக் கடமைப்பட்டுள்ளது. அவர் தமது பூரணமான ஆழ்ந்த ஆய்வுகள் மூலமாக, இன்றைய சமுதாயத் திலுள்ள வர்க்க முரண்பாடுகளையும் அதன் அடிப்படைகளையும், வெவ்வேறு வர்க்கத்திலுள்ள பெண்களின் நலன்கள் பற்றியும் எமது கண்களைத் திறந்துவிட்டார். வரலாற்றை பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்துடன் நோக்கியபடியால் முதலாளித்துவச் சீமாட்டிகளும் பாட்டாளிவர்க்கப் பெண்களும் நேசமிக்க சகோதரிகள் என்ற குழ்ந்தைத்தனமான வாதம் நீர்குமிழிகள் போல உடைந்து சிதறியது. முதலாளித்துவப் பெண்கள் இயக்கத்தையும் பாட்டாளிவர்க்கப் பெண்கள் இயக்கத்தையும் வேறுபடுத்தும் "ஆயுதத்தை" உருவாக்கியது மட்டுமல்லாமல் அதைப் பயன்படுத்தவும் எமக்குக் கற்றுத்தந்தார். அதே சமயம் பாட்டாளிப் பெண்களின் இயக்கத்தை, பாட்டாளி வர்க்கத்தின் சோசலிசத் தொழிலாளர் இயக்கத்துடனும் புரட்சிகர வர்க்கப் போராட்டத்துடனும் இணைக்க எமக்கு உதவினார்.

- Clara Zetkin.

What women owe to Karl Marx ( March 1903)

www.tamilarangam.net

# பெண் ஒடுக்குமுறை

## – ஒரு சித்தாந்தத்திற்கான தேடல்

நாம் வாழும் இந்த வர்க்க சமுதாயத்தில் காணப்படும் பெண் ஒடுக்குமுறைக்கான சித்தாந்த ரீதியான தேடலையும் அது தொடர்பான கலந்துரையாடலையும் உருவாக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். பெண் ஒடுக்கு முறையை ஒவ்வொருவரும் தாம் சார்ந்த வர்க்க நிலைப்பாட்டிலிருந்து நோக்குவது வழமையாகும் - நாமும் இந்தக் கட்டுரையில் மார்க்சியக் கண்ணோட்டத்துடன் இப் பிரச்சனையை நோக்குவது தவிர்க்க முடியாததாகிறது.



### பால்ரீதியான தொழில் பிரிவு.

எமது சமுதாயத்தில் காணப்படும் பெண் ஒடுக்குமுறையானது, பெண்களுக்கு இயற்கையாகவே அமைந்த பிள்ளை பெறுதல், அவர்களைப் பராமரித்தல் போன்ற பால் ரீதியான தொழில் பிரிவினால் ஏற்பட்டது என்ற கருத்து பரவலாகவே காணப்படுகின்றது.

### பெண் ஒடுக்குமுறையின் ஆரம்பம்

வளர்ச்சியடையாத வறுமை மிக்க ஆதிகாலத்தில் இயற்கையாக அமைந்த தாய்வழிக்குழுக்களின் தலைமையானது காலப் போக்கில் ஏற்பட்ட உற்பத்தி வளர்ச்சி முறைகளினால் தந்தை வழிக்குடும்ப முறையாக மாறியது.. தனி மனிதர்கள் தமது தேவைக்கே உற்பத்தி செய்ய முடியாத நிலமைகளிலிருந்து தமது தேவைகளுக்குமதிகமான (உபரி) உற்பத்தியை செய்யக் கூடிய வளர்ச்சிகள் ஏற்பட்டன. புதிய ஆயுதங்களைக் கண்டுபிடித்ததும், மிருகங்களைக் கட்டி வளர்க்க ஆரம்பித்ததும் இந்த மேலதிக உற்பத்திக்கு வழிவகுத்தது. இந்த வளர்ச்சிக் காலத்தில் இயற்கையான பிள்ளைப் பேறு, பிள்ளைகளைப் பராமரித்தல் போன்ற காரணங்களினால் தொடர்ச்சியாக உற்பத்தியில் ஈடுபட முடியாதிருந்த பெண்களிடம் குறைவான உபரி உற்பத்தியும், தொடர்ச்சியாக உபரி உற்பத்தியில் ஈடுபட்ட ஆண்களிடம் அதிக உபரியும் குவிய ஆரம்பித்தது. குவிந்த உபரிகளை (தனிச்சொத்துக்களை) பராமரிக்கவும் தமது சந்ததிகளுக்கு உரியதாக்கவும் ஆணாதிக்கக் குடும்ப முறை உருவாகியாது. இந்த அடிப்படையில் பெண் ஒடுக்கு முறைக்கான காரணம் சமூகத்திலுள்ள பால் ரீதியான தொழில் பிரிவுதான் என்ற நிலைப்பாடு உருவாகியுள்ளது.

பால் ரீதியான தொழில் பிரிவினால் ஏற்பட்ட பெண் ஒடுக்கு முறையும், ஆணாதிக்க குடும்பமும், சமூகத்தில் காணப்படும் ( பொருளாதார) ஒடுக்கு முறைகளுக்கு சமனாக அமைகின்றன எனற கருத்துக்களை ஆரம்ப மார்க்சிய எழுத்துக்களில் காண்கிறோம். இன்றைய சமுதாயத்தில் "குடும்பம் ஒரு பொருளாதார அலகு" (ஏங்கல்ஸ்), "குடும்பத்தில் கணவன் முதலாளி மனைவி தொழிலாளி", (ஏங்கல்ஸ்), "குடும்பங்களில் காணப்படும் அடிமைத்தனமே சமுதாயத்திற்கும் விரிகிறது" (மார்கஸ்) என்ற வாசகங்கள் பால் ரீதியான தொழில் பிரிவையும் பெண் ஒடுக்கு முறையையும் இணைக்கும் பார்வையாக இருக்கின்றன.

### இருவிதமான ஒடுக்குமுறைகள்

பெண் என்பவள் பிள்ளைகளை பெற வேண்டியவள், வளர்க்க வேண்டியவள், வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டியவள் என குடும்பத்தினுள் - வீட்டினுள் அடைக்கப்பட்டு - சமூக உற்பத்தியிலிருந்து படிப்படியாக அன்னியமாக்கப்பட்டு, ஆண்களில் பொருளாதார ரீதியாக தங்கியிருக்கச் செய்யப்பட்டதனால் அதன் விளைவான மற்றைய ஒடுக்கு முறைகளும் தொடர்கின்றன. இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் குடும்பங்களுக்குள் நடைபெறும் பெண் ஒடுக்கு முறையும், உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் மீதான ஒடுக்கு முறைகளும் வெவ் வேறாகவே நோக்கப் படுகின்றன. பால் ரீதியான ஒடுக்குமுறையும், வர்க்க ஒடுக்கு முறையும் இருவேறு ஒடுக்குமுறைகளாகக் கருதப்படுகின்றன. இந்த நிலைப்பாட்டின் பிரகாரம் இரண்டு விதமான சமூகப் போராட்டங்கள் மனித வரலாற்று வளர்ச்சியில் ஏற்பட்டிருக்க வேண்டும். ஒன்று ஆண், பெண் இரு பாலருக்கிடையிலான குடும்ப மேலாதிக்கத்திற்கான போராட்டம். மற்றையது வர்க்கங்களுக்கிடையிலான போராட்டம். இவ்வாறு பெண் ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தையும் வர்க்கப் போராட்டத்தையும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறுபடுத்திப் பார்க்கும் வழக்கம் பல துய பெண்நிலைவாதிகள் மத்தியில் காணக் கூடியதாகவும் உள்ளது.

இந்த நிலைப்பாடு விமர்சனத்துள்ளாக்கப்பட வேண்டியதாகவே உள்ளது.

சொத்துரிமையைப் பாதுகாப்பதற்கும் அந்த உடைமைகளைச் சந்ததிகளுக்குக் கொடுப்பதற்கும் பெண் ஒடுக்கு முறையும் அதன் அடிப்படையிலான குடும்ப முறையும் செயற்படுத்தப்படுகின்றன., என்பது சொத்துடைய வர்க்கங்களுக்குப் பொருந்துகின்றது. ஆனால் சொத்துரிமையற்ற பாட்டாளி வர்க்கக் குடும்பங்களினுள் நடைபெறும் ஆணாதிக்கத்திற்கும் பெண் ஒடுக்கு முறைக்கும் இந்த நிலைப்பாட்டின்படி விளக்கமில்லாது இருக்கின்றது. ஆகையினால் சொத்துரிமையை சந்ததிகளுக்குக் கொடுப்பதற்காக மட்டும் குடும்ப முறையும் அதனுடன் கூடிய பெண் ஒடுக்குமுறையும் வர்க்க சமுதாயத்தில் பேணப்படுகிறது என்பது முழுமையானதாகத் தெரியவில்லை.

பெண்கள் சமூகப்பொருள் உற்பத்தியில் "ஈடுபடாமல்" வைக்கப்பட்டிருந்தாலும், அவர்களின் உழைப்பு அவசியமாகும் காலங்களில் (அதிக இலாபம் கிடைக்கும் பொழுது அல்லது போர்க் காலங்கள்) பெண்கள் அதிகமாக சமூகப் பொருள் உற்பத்தியில் "ஈடுபட " வைக்கப் படுகின்றனர். ஆனால் சமூகப் பொருள் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள் என்ற முறையில் ஆண் தொழிலாளர்களுக்குச் சமமான கூலியையோ அல்லது உரிமைகளையோ பெற முடியாத வகையில் பெண் ஒடுக்கு முறை தொழில் நிலையங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மறு புறத்தில் பால் ரீதியான தடைகளையும் தாண்டி - விவாகம் செய்யாமல், பிள்ளைகளைப் பெறாமல் - உற்பத்தித் தொழிலில் ஈடுபடும் பெண்கள் மீதும் ( அப் பெண்களின் தொழிற்சாலை உழைப்பு அவசியமற்றதாகும் போது ) ஆணாதிக்கத்தின் அடிப்படையிலான கலாசார மற்றும் சட்ட ரீதியான பெண் ஒடுக்கு முறைகள் சமூகத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இது, வர்க்க சமுதாயத்தில் பெண் ஒடுக்கு முறை என்பது தனிக் குடும்பங்களுக்குள் மட்டுப்படுத்தப்படாமல், சமூக ரீதியாக ஊக்குவிக்கப்படும் ஆணாதிக்கத்தினால் - ( பொருளாதாரம், சட்டம், கலாசாரம் ........ என ) - பொதுவாக சமூகத்தின் சகல பகுதிகளிலும் செயற்படுத்தப் படுகிறது என்பதும் தெளிவாகிறது.

இதற்கான காரணியை, வர்க்க சமுதாயத்தின் செயற்பாட்டிற்கு அத்தியாவசியமான உழைப்பாளிகளின் உபரி உற்பத்தியின் சுரண்டலின் அடிப்படையிலேயே ஆராய வேண்டியுள்ளது.

## முதலாளித்துவச் சுரண்டல்

முன்னைய சமுதாய அமைப்புக்களில் உழைப்பாளிகள் சுரண்டப்பட்டது போலவே முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு முறையிலும் சுரண்டப்படுகிறார்கள். ஒரு தொழிலாளி, தானும் தன் குடும்பமும் உயிர் வாழ்வதற்கு அவசியமான பணத்தைப் பெறுவதற்கு தன் உழைப்புச் சக்தியை உற்பத்தி சாதனங்களை




வைத்திருக்கும் முதலாளிக்கு விற்க வேண்டியுள்ளது. அவனது தொழிற்சக்தியை முதலாளி ஒரு குறிப்பிட்ட நாட் கூலிக்கு வாங்குகின்றான். தொழிலாளி தனது வேலையை ஆரம்பித்து சில மணி நேரத்தில் தனது கூலிப் பணத்திற்கு சமமான மதிப்புள்ள வேலையை ஆரம்பித்த சில மணி நேரத்தில் தனது கூலிப் பணத்திற்கு சமமான மதிப்புள்ள வேலையை ( பொருள் உற்பத்தியை ) செய்து முடிக்கிறான். இத்துடன் தொழிலாளி தனது வேலையை நிறுத்திக் கொண்டால், முதலாளி எந்த விதமான மேலதிகமான உபரி மதிப்பையும் தொழிலாளியின் உழைப்பினால் பெற முடியாது. முதலாளி . தொழிலாளியின் உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்கியது மேலதிக (உபரி) உழைப்பைப் பெறுவதற்கேயாகும். தொழிலாளி தொடர்ந்தும் வேலை செய்வதனால் தனக்குக் கொடுக்கப்பட்ட கூலியிலும் பார்க்க அதிகமான ( உபரி) மதிப்பை உண்டாக்குகின்றான். இதுவே கூலி கொடுக்கும் முதலாளி அவனிடமிருந்து சுரண்டும் மேலதிக உழைப்பாகும்.

உதாரணமாக; பத்து மணித்தியாலம் வேலை செய்யும் ஒரு தொழிலாளி, ஆறு மணித்தியாலத்தில் தானும் தன் குடும்பமும் உயிர் வாழ்வதற்கு தேவையான கூலிப்பணத்திற்குரிய வேலைை செய்து முடித்து விடுகிறான் என வைத்துக்



www.tamilarangam.net



தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் களைப்படைகிறார்கள், முதுமையடைகிறார்கள், நோய்வாய்ப்படுகிறார்கள், இறந்து விடுகிறார்கள்.

தொழிலாளரின் உபரி உழைப்பினால் இலாபமடையும் முதலாளிகளுக்கு தொழிற் சக்தியை விற்கும் தொழிலாளர்கள் தொடர்ச்சியாகத் தேவைப்படுகிறார்கள். களைப்படையும், நோய்வாய்ப்படும், தொழிலாளர்கள் வீடுகளில் பாராமரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். - அதுமட்டுமல்ல. முதுமையடைந்து இறந்து விடும் தொழிலாளர்களுக்குப் பதிலாக புதிய உழைப்பாளிகளின் சந்ததிகளை உருவாக்க வேண்டியது முதலாளித்துவத்திற்கு மிக மிக அவசியமாகிறது.

இதுவே தொழிற்சக்தியின் சமூக மறு உற்பத்தியாகும். இந்த தொழிற்சக்தியின் சமூகமறு உற்பத்திக்கு அவசியமான செயற்பாடுகள் எல்லாம் தொழிலாளர்களின் குடும்பங்களிலேயே - தொழிலாள வர்க்கப் பெண்களின் உழைப்பினால் - நடைபெறுகின்றன.

தொழிலாளர்களின் பராமரிப்பைக்கூட பெண்களின் உதவியில்லாமல் -தொழிலாளர்கள் விடுதிகள், மற்றைய வசதிகள் மூலமாக - செய்தாலும், புதிய தொழிலாளர்களைப் பெற்றெடுப்பதில் பெண்களின் பங்கு இன்றியமையாததாகவே இருக்கின்றது.

குடும்ப அமைப்புக்களுக்கு வெளியில் தொழிலாளர்களின் பராமரிப்புக்களைச் செய்யும் பொழுது, முதலாளிகள் தமது இலாபத்தில் ஒரு பகுதியை அதற்காகச் செலவு செய்ய வேண்டியுள்ளது. ஆனால் இந்தப் பராமரிப்பு ஆணாதிக்கம் பேணப்படும் குடும்பங்களில் செய்யப்படும் பொழுது, எந்த விதமான கூலியுமில்லாமல் பெண்களினால் செய்யப்படுகின்றன.

தொழிற்சக்தியின் சமூக ரீதியான மறு உற்பத்தியில் மிக முக்கியமான,

கொள்வோம். இது அவசியமான உழைப்பு எனப்படும். இதன் பின் அவன் தன் தொழிற்சக்தியினால் உற்பத்தியாகும் உபரி உற்பத்தி முதலாளிக்கு இலாபமாகப் போய் சேர்கிறது.

ஒரு தொழிலாளி உற்பத்தி செய்யும் பொருளின் மதிப்பு (முதலாளி பெறும் மதிப்பு) அந்தத் தொழிலாளி உயிர் வாழ்வதற்கு அவசியமான பொருட்களின் மதிப்பிலும் (தொழிலாளியின் கூலியிலும்) பார்க்க அதிகமானதாகும். இவ்வாறு தொழிலாளியின் மேலதிக உழைப்பிலிருந்து பெறப்படும் செல்வமே முதலாளியின் மூலதனத்தை மேலும் பெருக்க வழி செய்கிறது. இதுவே முதலாளித்துவச் சுரண்டலாகும்.

### தொழிசக்தியின் மறு உற்பத்தி:

தொழிலாளிக்குக் கொடுக்கப்பட்ட கூலியானது அவனது தொழிற்சக்தியை மறு உற்பத்தி செய்வதற்கான பணம் என்பது தெளிவாகிறது. கூலியாகப் பெறும் பணத்தைக் கொண்டு தொழிலாளி தனக்கும் தனது குடும்பத்திற்கும் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வாங்கிப் பாவித்து மறு நாள் வேலைக்குச் செல்லுகிறான். ஆனால் அவன் கடையில் வாங்கும் அரிசி,பருப்பு,இறைச்சி ஆகியவை தாமாக உண்ணப்படக் கூடிய உணவாக மாறுவதில்லை. அவற்றின் மீது தொழிற்சக்தி பிரயோகிக்கப்பட்டு- ஒருவர் வேலையில் ஈடுபடுவதன் மூலமே உணவு தயாரிக்கப்படுகின்றது. இதற்கு உழைப்புத் தேவைப்படுகின்றது. தொழிலாளியினுடைய அல்லது அவனது குடும்பத்திலுள்ள ஒருவரின் மனைவி, தாய், சகோதரி உழைப்பின் மூலமே இதைச் சாதிக்க முடிகிறது. இங்கு குறிப்பிட்ட உணவு சமைக்கும் வேலையை மட்டுமல்லாது துணிதுவைத்தல், துப்பரவு செய்தல், ஆடை திருத்துதல் போன்ற பல வீட்டு வேலைகளும், ஒரு தொழிலாளியை வீட்டில் பாராமரித்து மறு நாள் வேலைக்குச் செல்ல உதவும் - தொழிற் சக்தியை மறு உற்பத்தி செய்யும் - உழைப்பாக அமைகின்றன. ஒரு தொழிலாளியின் கூலியை - வாழ்க்கைச் செலவின் அடிப்படையில் - நிர்ணயிக்கும் பொழுது வீட்டில் நடை பெறும் இந்த உழைப்புக்கான கூலி முதலாளிகளினால் கணக்கில் எடுக்கப்படுவதில்லை.

www.tamilarangam.net

உழைப்பாளிகளின் சந்ததி உற்பத்தி, பிள்ளைகளின் பராமரிப்பு ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஆணாதிக்கமுள்ள குடும்ப முறை முதலாளித்துவச் சுரண்டலுக்கு அத்தியாவசியமாகியுள்ளது.

இவ்வாறு ஆணாதிக்கம் புற ரீதியாகவும், அக ரீதியாகவும் ஆண்கள் மத்தியில் முதலாளித்துவ நலன்களுக்காக வளர்க்கப்படுகின்றது. அதே நலன்களுக்காக பெண் ஒடுக்குமுறை பேணப்படுகின்றது.

சொத்துரிமையுள்ள வர்க்கங்களில் சொத்துரிமையை சந்ததிக்கு கொடுக்கும் முறையில் ஆணாதிக்கம் பேணப்படுகின்றது.. மறுபுறத்தில் பெரும்பான்மையான உழைப்பாளிகளைக் கொண்ட இந்த சமூக அமைப்பில் தொழிற்சக்தியை மறுஉற்பத்தி செய்வதற்காக பெண் ஒடுக்கு முறையை அடிப்படையாகக் கொண்ட குடும்ப முறையை சமூக அமைப்புக்குள் நடைமுறைப்படுத்துகின்றது.

பெண்ணின் - சந்ததியை உருவாக்கும் சேவை - முதலாளித்துவத்திற்கு தொழிற் சக்தியை மறு உற்பத்தி செய்யும் சேவை - பாதுகாக்கப் படுவதற்காக பல் வேறு சட்டங்கள் அமுல் நடத்தப்படுகின்றன. பெண்ணின் பிள்ளைப்பேறு காலங்களில் பராமரிப்பு, கணவன் பிள்ளைப் பராமரிப்புக்கு கட்டாயமாகப் பணம் கொடுக்க வேண்டுமென்ற சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. சமூக உற்பத்தியில் ஈடுபடாமல் பெண்ணானவள் குழந்தைகளை வளர்ப்பதில் ஈடுபட வேண்டுமென்பதை இது ஆணாதிக்க ரீதியாக வலியுறுத்துகிறது. பெண்களின் கூலியற்ற உழைப்பின் மூலம் புதிய தொழிலாளிகளை முதலாளித்துவத்திற்கு உருவாக்க வேண்டிய சகல சட்ட ரீதியான, கலாசார ரீதியான விதிமுறைகள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. களைப்படைந்த தொழிலாளி, வயோதிபர், நோய்வாய்ப்பட்டவர்கள், ஆகியோர்களைப் பராமரிப்பதற்கு தமது இலாபங்களைச் செலவளிக்க முதலாளிகள் (முதலாளித்துவ அரசுகள்) விரும்புவதில்லை. ஆணாதிக்கமும் பெண் ஒடுக்கு முறையும் நிலவும், கலாசார மற்றும் சட்டங்களினால் அமுல் நடத்தப்படும் குடும்பங்களில் பெண்களின் இலவச உழைப்பினால் முதலாளிகள் ( அரசுகள் ) மேற்கூறிய சேவைகளைப் பெறுகின்றனர்.

இவ்வாறு சமூகத்தில், குடும்பங்களுக்குள் பெண்களினால் இலவசமாகச் செய்யப்படும் தொழிற்சக்தியின் மறுஉற்பத்தியே (சமூக மறுஉற்பத்தி) பெண் ஒடுக்குமுறையின் அடிப்படையாக அமைகிறது.

இந்த சமூகமறுஉற்பத்தியின் அடிப்படையிலான சித்தாந்தக் கண்ணோட்டம், வர்க்க சமுதாயத்தில் பெண் ஒடுக்கு முறைக்கான ஒரு சித்தாந்த தளத்தை அடைய எமக்கு உதவுகிறது. இது தொழில் செய்யும் பெண்களின் ஒடுக்கு முறையை மட்டுமல்லாது சகல தொழிலாள வர்க்கப் பெண்களின் ஒடுக்கு முறையையும் விளக்கக் கூடியதாகவே உள்ளது.

பெண் ஒடுக்குமுறை பற்றிய கருத்துக்கள் மேலும் பரிமாறிக் கொள்ளப்படும் பொழுது, எமது சிந்தனைகள் மேலும் தெளிவு பெறலாம்.

(மறுபிரசுரம் - சிந்தனை 2/90) ✍ பரா.

# சொல்லுவார் சொல்லுவாராயின்....

1990 இல் அம்பாறையில் இனக்கலவரங்கள் மூண்ட போது பெருமளவு தமிழர்கள் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணத்திலும் இந்தக்கலவரம் பரவும் அபாயம் இருந்தது. அந்த நேரத்திலே தற்காலிகமாக யாழ்ப்பாணத்தைவிட்டு செல்லுமாறு முஸ்லீம்களை நாம் கேட்டுக் கொண்டோம். அவர்களின் பாதுகாப்புக்காகவே இதைச்செய்தோம். ஆனால் போர் முடிவடைந்து சமாதானம் திரும்பும் போது யாழ்ப்பாணத்துக்கு முஸ்லீம்கள் திரும்புவதை நாம் அனுமதிப்போம்.

**பி.பி.சிக்கு கொடுத்த பேட்டியில் பிரபாகரன்.**


*அவர்களின் தங்க நகைகளையும் சொத்துக்களையும் "பாது காப்பதற்காகவே" நாம் அபகரித்தோம். போர் முடியிறதாவது... சமாதானம் வறதாவது... நாம் இருக்கும் வரை.... (பி.பி.சி க்குச் சொல்லாத பேட்டியில்).*

அரசியல் தீர்வில் அக்கறை இருக்குமானால் புலிகள் தெரிவுக்குழுவுக்கு யோசனை அனுப்பட்டும்

**பத்திரிகையாளர்களுக்குக் கொடுத்த பேட்டியில் ரணில் விக்கிரமசிங்க.**

*அப்படி ஒரு தீர்வில் அக்கறையில்லாதபடியால் தான் நாங்கள் எந்த யோசனைகளையும் தெரிவுக்குழுவுக்கு அனுப்பவில்லை.*

www.tamilarangam.net



# 500 வருட காலனித்துவ ஆக்கிரமிப்பு

**–வாணிதாசன்.**

500 ஆண்டுகாலமாக ஐரோப்பிய முதலாளித்துவ ஆதிக்கவெறியர்களின் பிடியிலும் மதவெறியர்களின் பிடியிலும் சிக்குண்ட அமெரிக்க,ஆபிரிக்க,அவுஸ்ராலிய,ஆசியப் பழங்குடி மக்களை அடிமைகளாகவும் அனுதைகளாகவும் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி இருக்க இடமின்றி தாம் பிறந்த மண்ணில் உணர்வற்ற உயிரற்ற பிணமாக மிருகக்காட்சிச்சாலையில் உள்ள மிருகங்களைவிட கேவலமான நிலையில் நடமாடவைத்துள்ளார்கள்.

இன்று ஐரோப்பியர்கள் எமது பழங்குடி மக்களின் நிலையைப்பார்த்து முதலைக்கண்ணீர் வடிப்பதுமல்லாமல் இவர்களின் சரித்திரமே இதுதான் என்றும் எழுதியும் வைத்துள்ளார்கள்.



எம்மைப்பற்றி எமது கலச்சாரத்தைப்பற்றி எமது உணர்வுகளைப்பற்றி அதிகம் தெரிந்து வைத்துள்ள இந்த ஐரோப்பியர்கள் யார்? ஏன் இவர்கள் அளவில்லாத பாசத்தையும் அன்பையும் எம்மேல் கொண்டுள்ளார்கள்!!.

ஐரோப்பிய முதலாளித்துவ ஆக்கிரமிப்பாளர்கள் இந்த உலகத்தை ஆட்டிவைத்ததுமாத்திரம் அல்லாமல் இன்றும் நான் சென்னல் நீ ஆடவேண்டு மென்று நேரடியாக எமது நாடுகளுக்கு உத்தரவைப்பிறப்பித்துக்கெண்டிருக்கிறார்கள், எமது சரித்திரத்தை கலாச்சாரத்தை வாழ்க்கையை மாற்றியதும் அல்லாமல் இனியும் நாம் எப்படி வாழவேண்டும் என்று ஆலோசனையை வளங்கிக் கொண்டிருக்கும் இந்த ஐரோப்பியர்கள் யார்?

இந்த ஐரோப்பியர்கள் எம்மைப்பற்றி எழுதியவைத்த சரித்திரத்தை நாம் வாசித்துவிட்டு எமது இனத்தவர்களாகிய அவுஸ்ரெலியர்களையும், ஆபிரிக்கர்களையும் மனித மாமிசமுண்ணும் காப்பிலிகள் என்றும், அமெரிக்க ஆசிய மக்களை கோலைவெறிபிடித்த காட்டுமிராண்டிகள் என்றும் , நாமே எமது பேச்சிலும் எழுத்திலும் - ஐரோப்பியர்கள்தான் எம்மை வளர்த்தார்கள், அவர்களின் சிந்தனையே எமது சிந்தனை என்று பெருமையாக காட்டிக்கொள்கிறோம்.

40 ஆயிரம் ஆண்டுகளாக உலகின் பல பாகங்களில் கலை கலாச்சாரம் மனிதநேசத்துடன் வாழ்ந்த மக்களை ஒரு சில வருடங்களில் வெறிகெண்ட வேங்கையின் வாயில் அகப்பட்ட மானை குதறிஎறிந்ததுபோல் குதறிவிட்டு இந்த மான் தன்னை தாக்கியதால் ஏற்பட்ட காயமே தனது வாயில் வடியும் இரத்தமென ஒப்பாரி வைக்கிறார்கள் இந்த ஐரோப்பியர்கள்.

காலனித்துவ வெறியர்கள் எம்மைப்பற்றி எழுதிவைத்த சரித்திரங்கள் எல்லாம் ஆராச்சிமுலமாகவே எழுதப்பட்டதாக கூறும் இவர்கள், தாம் எழுதியவைகளையே எமக்கு ஆதாரமாக தருகின்றார்கள்.

இவர்கள் செய்தது ஆர்+ஆட்சியே தவிர ஆராய்ச்சி அல்ல,
இவர்கள் எழுதியது தரித்திரமே ஒழிய சரித்திரம் அல்ல.
யார் இவர்கள்: இந்த (ச)தரித்திரத்தைப் படைத்த ஐரோப்பியரது வாழ்க்கையை ஆரம்பகாலத்திலிருந்து நாம் அறிந்து கொண்டால் அன்றி இக்கேள்விகளுக்கு நாம் விடை காணமுடியாது.

ஐரோப்பியர்களுடைய சரித்திரத்தை நாம்

www.tamilarangam.net

எப்படித்திருப்பிப்பார்த்தாலும் 6000 ஆண்டுகளாக வேறு எந்தக்கண்டத்திலும் இடம் பெறுத வகையில் ஐரோப்பா யுத்தக்களமாக மட்டுமல்லாமல், கொலைகளும்,கொள்ளைகளும் நாளந்த வாழ்க்கையில் ஒன்றாகவே இருந்தது.
ஐரோப்பாவின் வடக்கிலிருந்து தெற்குவரையும் மேற்கிலிருந்து கிழக்கு வரையும் இரத்தமே ஆறாக ஓடியது.
இதை நான் செல்லவில்லை,இவர்களின் சரித்திரமே கூறுகிறது.
ஆதிகாலத்தில் ஐரோப்பாவில் ஒருவித உணவுப்பெருட்களும் இருக்கவில்லை இவர்களின் முக்கிய உணவு மாமிசமாகவே இருந்தது.




இன்று இங்கு காணப்படும் பெருந்தொகையான உணவுப் பொருட்கள் காலனித்துவ ஆக்கிரமிப்பின் பின்தான் அறிமுகப்படுத்தப்பட்டு சிறிது சிறிதாக உற்பத்தி தொடங்கியது.

ஐரோப்பாவின் சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க உணவு பற்றாக்குறையினால்கொலை கொள்ளை சூறையடுவதும் நாளாந்த வாழ்க்கையாக இருந்து பின் ஓர் வருத்தமாகவே மாறிவிட்டது. இந்த வருத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் யுத்த வெறியர்களாக மாறியதுமல்லாமல் யுத்தமே இவர்களின் கலாச்சாரமா மாறியது.

இதன் காரணமாகவே யுத்தக்கருவிகள் பற்றிய முன்னேற்றம் வேறு எந்த கண்டங்களில் ஏற்படாதவாறு வளர்ச்சியும் அடைந்தது.

இந்த யுத்த வெறிகெண்ட மக்கள் தமது நாட்டில் தம்மைத்தாமே தம்மிடமிருந்து பாதுகாத்துக் கெள்வதற்காக தம்மைச்சுற்றி கூடுகட்டியே வாழ வேண்டியிருந்தது.

இன்று ஐரோப்பாவின் பழைய நகரங்களுக்குப்போவிர்களானால் அங்கு நகர மதில்களையும் காவற் கோபுரங்களையும் காணக்கூடியதாகஇருக்கும்.

இதை இவர்கள் பெருமையுடன் 600 அல்லது 700 வருடங்களுக்கு முதல் கட்டப்பட்ட நகரமதில் என்று கூறுவார்கள்.

இது நகரமதில் இல்லை நரகமதிலாகவே காட்சிஅழித்தது. சமயகுருமாரின் அட்டூழியம், கொலைவெறியர்களின் ஆதிக்கம், பெண்வதை, பிள்ளைகள் அடிமைவேலை, கெலை சித்திரவதைகளுடனும் தான் இந்த கூட்டிற்குள் வாழவேண்டியதாக இருந்தது.

சமயகுருமார்கள் தமது விருப்பத்துக்கும், சட்டங்களுக்கும் அடங்கி நடக்கமறுத்த ஆண்களையும் பெண்களையும் உயிருடன்வைத்து மதகுருமாரின் கடைசி ஆசிர்வாதத்துடன் எரித்தார்கள்.

இவர்களில் ஒரு லட்சத்துக்கும் மேலன பெண்கள்(Hexe) சூனியக்காரிகள் என்று குற்றம் சட்டப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டார்கள்.

கூண்டில் அடைபட்டிருந்த மக்கள் மற்றைய கூண்டில் அடைபட்டுள்ள மக்களைத்தாக்கியும் கொலைசெய்தும் அவர்களது பொருட்க்களை சூறையாடியும் அப்படி சூறையாடமுடியாத பொழுது தீயிட்டும் அழித்தார்கள்.

இதனால் ஆண்கள் யுத்தம் புரிவர்களாகவும் பெண்களும் பிள்ளைகளும் வேலையாளராகவும் நடமுறையில் கொண்டுவரப்பட்டது.

14ம் நூற்றாண்டு வரை கொலைக்கூடமாகவும் கழிவுத்தொட்டியாகவும் காட்சி அழித்தது மாத்திரமல்லாமல் பசி பட்டினியுடன் சேர்ந்து பல விதமான நோய்களும் இங்கு பரவியது.

குஷ்டரோகம், தசையழிவு, கொலரா, பிளோக் பெக்கன், பாலியல்வருத்தம் போன்ற பலநோய்களால் வதைபட்டார்கள்.

இதன் நிமிர்த்தம் உ+ம்: 1348/49 ஆண்டுகளில் இங்கிலாந்திலும், பிரான்ஸ்சிலும், 1349/50 ஆண்டுகளில் நோர்வேயிலும் பல இலச்சக்கணக்கான மக்கள் உயிரிளந்தார்கள்.

இந்தக் கொடூரம் நிறைந்த வாழ்க்கையில் 14ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஓர் பெரிய மாற்றம் ஏற்பட்டது.


1482 இல் மதவெறிபிடித்த யுத்தநோயால் பாதிக்கப்பட்ட போத்துக்கீசர் ஆபிரிக்காவிற்கும் 1492 கொலம்பஸ் அமெரிக்காவிற்கும் போய் அடைந்தார்கள்.

அங்குள்ள செல்வங்கள் சூறையாடப்பட்டன. மக்கள் இவர்களின் யுத்த வெறிக்கு பலியானார்கள். கலாச்சாரங்கள் அழிக்கப்பட்டது.

மக்கள் மதகுருமார்களுடைய பலிபீடங்களுக்கு கொண்டுவரப்பட்டு பலி கொடுக்கப்பட்டார்கள். இவர்களின் யுத்தகொலை வெறி எம்மேல் திருப்பப்பட்டது.

அங்கு கிடைத்த செல்வங்களையும்,உணவுப் பொருட்களையும் ,தொழில் நுட்பங்களையும் ஐரோப்பியர் தமக்கு சொந்தமாக்கிக் கொண்டதின்மூலம் தமது மக்களின் பசியை மாத்திரமில்லாமல் கொலைவெறியையும் குறைக்கூடியதாக இருந்தது.

www.tamilarangam.net



இவர்களுடைய வருத்தத்துக்கு மருந்தையும் எம் நாட்டிலேயே தேடினார்கள்.

செல்வங்களையும், தொழில்நுட்பங்களையும் கண்டறிந்த ஐரோப்பிய மக்களிடம் முதலாளித்துவ சிந்தனைவளர்ச்சி ஏற்பட்டது.

காலனித்துவ முதலாளித்துவம் வளர்வதற்கு வளர்ச்சிஅடைந்த யுத்தவழிமுறைகள், யுத்தக்கருவிகள் பெரிதும் துணையாக இருந்தன.

இவர்களின் வளர்ச்சியும் பல ஆயிரம் ஆண்டுகளாக அடைந்த அனுபவங்களும் உலகின் பலபாகங்களிலுள்ள நாடுகளை சூறையாடவும், மக்களை அழித்து அடிமையாக்கக் கூடியதாகவும் இருந்தது.

இன்று இந்த யுத்த வளர்ச்சி அணுஆயுத வளர்ச்சியாக மாறி ஆகாயம் நிலம் நீர் மார்க்கங்களாக எம்மை அழிப்பதற்கு தயாரகவே உள்ளது.

இன்று எம்மை அழிப்பதற்காக தமது ஆயுதங்களை எமக்குத்தந்து எம்மை தமது கூத்தாடிகளாக ஆக்கி எமது அழிவையும் எமது முன்னேற்றத்தையும் தமக்கு வேண்டியதுபோல் செய்துகொள்வதற்கு எம்மை குத்தகைக்கும் வேண்டியுமுள்ளார்கள்.

:ஐரோப்பியரிடம் உள்ள இன, நிறவாதம் என்பது இன்று நேற்று துவங்கியதல்ல,இதுவும் இவர்களின் வாழ்க்கையில் தொற்றிக்கொண்ட வருத்தங்களிலும் ஒன்று.

இது ஆதிகாலந்தொட்டே ஐரோப்பியர்களால் கையாளப்பட்டுவந்துள்ளது.

இவர்கள் காலனித்துவ ஆக்கிரமிப்பின் போது இனத்துவேசத்தை அழகான முறையில் கையாண்டதால் தாம் செய்த கொடுமைகளை மூடிமறைக்கக் கூடியதாக இருந்தது. உ+ம்: உணர்வில்லாத மிருகங்கள், காட்டுமிராண்டிகள், மனிதமாமிசம் உண்பவர்கள், முழுமையாக மனிதவளர்ச்சியை அடையாதவர்கள், மூடக்கொள்கைகளில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள், சாதாரணமாக இவர்களுடன் கதைக்கமுடியாதவர்கள், விளக்கமில்லாதவர்கள், அத்துடன் நிறங்களும் அவர்களுடைய வளர்ச்சியை காட்டுவதாகவும் ஆராய்ச்சிக்கட்டுரைகளுகூட எழுதிவைத்தார்கள்.

### பழங்குடிமக்கள்:

பழங்குடி மக்களாகிய அமேரிக்க, அவுஸ்ராலிய ஆசிய, ஆபிரிக்க நாட்டுமக்கள், கலை, கலாச்சாரம், உற்பத்தி வளர்ச்சிகளில் பெரிதும் முன்னேற்றம் அடைந்திருந்தார்கள்,

ஆனால் இவர்களுடைய யுத்தமுறையோ, யுத்தக்கருவிகளோ வளர்ச்சிஅடையாத பின்தங்கியதாகவே காணப்பட்டது.

பெரிய விஞ்ஞான ரீதியான கண்டுபிடிப்புக்கள், ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. கட்டிடக்கலைகளில் பெரிதும் வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. உலோகங்களை பயன்படுத்தி பாவிக்கும் முறைகளையும் இவர்கள் அறிந்திருந்தார்கள்.

இப்படிப்பட்ட வளர்ச்சியை ஏற்படுத்திக்கொண்ட மக்கள் ஏன் ஆயுதவளர்ச்சியை ஏற்படுத்திக்கொள்ளவில்லை? தேவையைப் பொறுத்துத்தான் வளர்ச்சியே தவிர, ஐரோப்பியர்களைப்போல யுத்தவளர்ச்சியைக் கொண்டு தமது தொவைகளைப் பெறவில்லை.

30 - 40 ஆயிரம் ஆண்டுகளாக மனித நேசத்துடன் வாள்ந்த மக்களை ஒருசில வருடங்களில் அழித்தொழித்துவிட்டு யுத்தவெறிபிடித்த காட்டுமிராண்டிகள் தம்மைத்தாமே அழித்துக்கெண்டார்கள் என்று இரத்தம்படிந்தவாயுடன் ஏங்கிக்கெள்கிறார்கள். அமெரிக்காவில் மட்டுமே 700 லட்ச்சத்துக்கும் மேலன மக்களையும், 1000லட்ச்சத்துக்கும் மேலாக Bison வீசோன் எருமைகளையும் அழித்தவர்களுக்கு உபத்திரம் செய்வதைத்தவிர உதவி தெரியாது.

www.tamilarangam.net




"உலகில் எங்கெல்லாம் அபலைகள் துன்பப் படுகின்றார்களோ, அங்கெல்லாம் அனாத ரட்சகனாக - பரந்தாமன் அபலைகளுக்கு உதவத் தோன்றுவது போல - அமெரிக்க இராணுவமும் - பட்டினியால் வாடிய சோமாலியா மக்களின் துயர்தீர்க்க தரை இறங்கியது". இந்த வகையான பிரசாரங்களே உலகின் தொலை தொடர்பு சாதனங்களில் வெளியாகின.

மறுபுறத்தில் உலகின் எந்தப் பகுதியிலும் அமெரிக்க இராணுவம் தனக்குரிய தருணத்தில் தலையிடும் அதிகாரத்தையும் பெற்று வருகின்றது என்பதையும் முதலாளித்துவ ஸ்தாபனங்கள் சொல்லி வைத்தன. ஆனால் அமெரிக்காவின் சோமாலியா மீதான நடவடிக்கைக்கும், கடந்த காலத்தில் அமெரிக்கத் துருப்புக்கள் கிரேனேடாவிலும் பனாமாவிலும் நடாத்திய இராணுவ ஆக்கிரமிப்புக்களுக்கும் எந்த விதமான வித்தியாசங்களும் இல்லை என்பது உண்மையாகும். இது அமெரிக்க ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகும்.

சோமாலியாவின் பஞ்சம் ஒரு புதிய விடயமல்ல. 1962ம் ஆண்டிலிருந்தே அந்த நாட்டில் பஞ்சம் ஆரம்பமாகியிருந்தது. 1970களில் ஏதோப்பிய - சூடான் போர்களினால் பெருமளவிலிலான மக்கள் இடம் பெயர்ந்த பொழுதும் பாரிய அளவில் பஞ்சம் தலைவிரித்தாடியது. ஆனால் அப்பொழுதெல்லாம் அமெரிக்காவின் கருணையுள்ளம் சோமாலியாவைப் பற்றிச் சிந்திக்கவில்லை. ஆனால் இன்று சோமாலியாவிற்கு 28000 அமெரிக்காத் துருப்புக்கள் "பட்டினியைத் தீர்க்க"அனுப்பபட்டிருக்கின்றன என்றால் அதற்கான காரணம்-அந்த மக்களின் பசியல்ல, தற்போதை உலகின் பொருளாதார அரசியல் காரணங்களேயாகும்.

சோமாலியாவின் இந்த நிலமைகளுக்கு யார் பொறுப்பாளி என்பதைத் தேடிப்பார்ப்போமாயின் இன்று முதலைக்கண்ணீர் வடிக்கும் ஐரோப்பிய அமெரிக்க அரசுகளே அந்த நாட்டை சுரண்டி வறுமையில் வாட விட்ட நாடுகள் என்பது தெரிய வரும்.

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பு 1884ல் பேர்லினில் நடை பெற்ற மேற்கு வல்லரசுகளின் மகாநாட்டில் மத்திய ஆபிரிக்காவை எப்படி, பிரிட்டன், பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி, போர்த்துகல், ஜேர்மனி ஆகிய நாடுகள், தம்முள் எப்படிக் கூறு போட்டுக் கொள்வது என்பது தீர்மானிக்கப்பட்டது. இந்த மகாநாடு நடப்பதற்கு முன்பே இந்த நாடுகள் ஆபிரிக்க மக்களை அடிமைகளாகப் பிடித்து விற்றும் வளமுள்ள நிலங்களை அபகரித்தும் குறையாடத் தொடங்கியிருந்தன.

ஆபிரிக்காவின் கிழக்குக் கரையோரப் பகுதியில் உள்ள சோமாலியா நாட்டின் வரட்சியான பிரதேசத்தின் செல்வங்கள் அங்கு மந்தை மேய்த்தவர்களின் ஒட்டகங்களும் மந்தைகளும் தான்.

பல நூற்றண்டுகள் காலமாக அராபியர்கள், துருக்கியர்கள், போர்த்துக்கேயர்கள் சோமாலியாவின் பல பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். 1886ல் பிரான்சும் பிரித்தானியாவும். இத்தாலியும் பெரும் பகுதிகளைத் தமதாக்கிக் கொண்டன- சுவேஸ் கால்வாய்க்குச் செல்லும் வழியில் சோமாலியா இருந்ததினால் அவர்கள் இந்த நாட்டில் அதிகம் அக்கறை காட்டினார்கள். வல்லரசுகள் தமக்குள் சோமாலியாவைக் கூறுபோட்ட பின், அன்னிய ஆதிக்கத்திற்கு எதிராக அந்த மக்களின் எதிர்ப்புக்கள் உருவாகின. 1899இல் இருந்து 20 வருடங்களாக எதிர்ப்புப் போராட்டங்கள் நடை பெற்றன. அதற்குத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமை தாங்கியவனை "விசர் பிடித்த முல்லா" என்று முதலாளித் சரித்திரவியலாளர்கள் பெயர் சூட்டினர். 1920 இல் பிரித்தானியாவின் "றோயல் எயர் போர்ஸ்" விமானங்கள் ஈவிரக்கமின்றி குண்டுகளைப் பொழிந்து இந்த எதிர்ப்புப் போராட்டங்களை அடக்கின.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்பு ஏற்பட்ட மாற்றங்களினால் இத்தாலியின் கட்டுப்பாட்டின் கீழ் சோமாலியா ஐக்கிய சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. 1960 ஜுலை மாதத்தில் பிரிட்டன், இத்தாலி ஆதிக்கம் செலுத்திய சோமாலியாவின் பகுதிகள் சுதந்திர நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. ஆனால் பண்டைய சோமாலியாவின் பெரும் பகுதி "ஒகடென்"என்று அழைக்கும் பிரதேசமாக ஏத்தியோப்பிய மன்னரின் ஆட்சியின் கீழ் இருந்தது. இந்தப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் சோமாலியாவுடன் இணைவதற்காக சோமாலிய விடுதலை முன்னணி என்ற அமைப்பின் கீழே ஏத்தியோப்பிய அரசுடன் போராடி வந்தனரா். சோவியத் யூனியனின் ஆதரவைப் பெற்ற இந்த முன்னணியினர் பெரும் வெற்றிகளையும் ஈட்டினர். அதே வேளையில் எத்தியோப்பிய இராணுவத்தில் இருந்த சில சோவியத் யூனியனுக்கு ஆதரவான இராணுவத் தலைவர்கள் எத்தியோப்பியா சர்வாதிகாரத்தைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றினார்கள். சோவியத் ஆதரவாளர்கள் எத்தியோப்பியாவில் ஆட்சிபீடம் ஏறியதும் சோவியத் யூனியனும் தனது ஆதரவை ஆட்சியாளர்களுக்குக் கொடுக்க ஆரம்பித்தது. கைவிடப்பட்ட சோமாலிய விடுதலை முன்னணியினருக்கு அமெரிக்கா ஆயுத உதவி கொடுக்க முன் வந்தது. எனினும் எத்தியோப்பிய அரசபடைகள் முன்னணியினரைத் தோற்கடித்தன. பல்லாயிரக்கணக்கான சோமாலியர்கள் அகதிகளாக எத்தியோப்பிய "ஒகாடன்" பிரதேசத்திலிருந்து சோமாலியாவுக்குள் அகதிகளாக விரட்டப்பட்டனர். சோமாலியாவில் பெரும் பஞ்சம் பரவியது. ஆயுதம் கொடுத்துதவிய அமெரிக்கா, பஞ்சத்தில் அவதியுற்ற சோமாலிய மக்களுக்கு உணவு கொடுக்க மறுத்து விட்டது.

தொடரச்சியான வல்லரசுகளின் ஆதிக்கத்தின் கீழ் அந்த நாட்டு சுதேசியப் பொருளாதாரமும் வளங்களும் சீரழிக்கப்பட்டன. உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களும் நிலங்களும் ஏற்றுமதிப் பயிர் செய்கைகளில் ஈடுபடுத்தப்பட்டன. நூற்றாண்டிற்கும் மேலான இத்தகைய நடவடிக்கைகள் நாட்டு மக்களின் பொருளாதாரத்தைச் சீரழித்துக் குட்டிச்சுவராக்கியது. வெவ்வேறு வல்லரசுகளின் அரசியல் விளையாட்டுகளுக்குக் களமாக விளங்கிய இந்தப்பிரதேசத்தின் பொருளாதாரப்பிரச்சனைகள் எந்த விதத்திலும் தீர்க்கப் படவில்லை. ஆனால் சமூகத்தின் ஒட்டுண்ணியாக வளரும் ஆளும் வர்க்கத்தையும் ஆயுத சர்வதிகாரிகளையும் உருவாக்குவதில் வல்லரசுகள் தங்களின் பங்குகளைச் சிவரச் செய்தன.

1981ல் சோமாலியாவில் பதவியிலிருந்த மகமட்சயிட் பாயரே என்ற சர்வாதிகார ஜனாதிபதியுடன் அமெரிக்கா சினேகித ஒப்பந்தம் செய்து கொண்டது. சர்வதிகாரியின் ஆட்சியில் அரசியல் கட்சிகள் கலைக்கப்பட்டன. உள்நாட்டில் உருவாகிய எதிர்ப்புக்கள் அமெரிக்க உதவியுடன் அடக்கப்பட்டன. எனினும் சர்வதிகாரத்திற்கு எதிராகப் போராடிய சோமாலிய தேசிய இயக்கம் நாட்டின் வடபகுதியைக் கைப்பற்றிக் கொண்டது. இதைத் தொடர்ந்து சோமாலியா ஐக்கிய காங்கிரசைச் சேர்ந்த ஆயுதக் குழுவினர் பாயரேயைப் பதவி இழக்கச் செய்தனர். ஒரு மக்கள் போராட்டத்தின் வெற்றியாக மாறியிருக்க வேண்டிய இந்த நிகழ்வு, இரு மனிதர்களின் பதவிப்போராட்டமாக மாறியது. அலி மகலி மகமட் தன்னை ஜனாதிபதியாகப் பிரகடனம் செய்தார். தளபதி மகமட் பரா அய்டீட் அவரின் எதிராளியானார். இருவரும் ஒரே கட்சியையும்



www.tamilarangam.net




ஒரே இனத்தையும் சேர்ந்தவர்கள். இவர்களின் போராட்டம் நகரங்களை அழித்தது. 4000க்கும் மேற்பட்டோர் பலியாகினர் 10000 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இரண்டு தளபதிகளும் நாட்டை இரண்டாகப்பிரித்து, ஆயுதங்களைக் குவித்துப் போராடினார்கள். எந்த வித வேலைவாய்ப்புமற்ற இளைஞர்கள் ஆயுதங்கள் மூலம் உதவி நிறுவனங்களையும் மற்றவர்களையும் மிரட்டி வாழ்த்தலைப்பட்டனர். தொடர்ச்சியான உள்நாட்டுப் போர்களினால் இடம் பெயர்ந்து அகதிகளாகிய மக்களின் பட்டினியும் துன்பங்களும் வெளிநாட்டவர்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை.

திடீரென்று ஒரு நாள் பட்டினியைத்தீர்க்க அமெரிக்கத் துருப்புக்கள் சோமாலியாவுக்கு அனுப்பப்பட்டார்கள்.

சோமாலிய போன்ற ஒரு சிறிய நாட்டிற்குத் தேவையான உணவுப்பொருட்களை அனுப்பி அங்குள்ள பட்டினியைத் தீர்ப்பது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் முடியாத காரியமாக இருக்கவில்லை. ஆனால் "புஷ்ஷின் புதிய உலக ஒழுங்கு முறை" கோட்பாட்டின் அடிப்படையில் எந்த நாட்டிலும் தலையிட அமெரிக்காவிற்கு உள்ள அதிகாரத்தைப் பிரயோகிப்பது அவசியமாகியது. சோமாலியாவின் பஞ்சத்தைப் போக்க இராணுவம் அவசியம் தானா என்ற கேள்விக்கு அங்கு ஏற்கனவே உதவி செய்து வந்த நிறுவனங்கள் இல்லையென்றே பதில் கொடுத்துள்ளன. சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தமக்குப் பாதுகாப்புத் தேவையில்லை என்று அறிவித்தது. மற்றைய உதவி செய்யும் நிறுவனங்களும் இராணுவ பாதுகாப்பின்றி நடுநிலமையான ஸ்தாபனங்களாக இருக்கவே விருப்பம் தெரிவித்தன. போதியளவு உணவுப் பொருட்களை அனுப்புவதன் மூலம் பஞ்சத்தைத் தீர்க்கலாம் என அவை கருதின. அத்துடன் மக்களுடன் தொடர்புகளையுடைய குலதலைர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதன் மூலமே உணவு வினியோகத்தைச் செய்ய முடியும் எனவும் அவர்கள் கருதினார்கள். ஆனால் அமெரிக்கத் துருப்புக்களின் வருகை இந்த நடவடிக்கைளைக் கடினமாக்கியுள்ளன.

ஆபிரிக்காவில் மனித உரிமைகள் மீறப்படுகின்றனவா எனப் பூதக்கண்ணாடி போட்டுப் பார்க்கும் "ஆபிரிக்கா வார்ச்" என்ற அமெரிக்க ஸ்தாபனத்தில் தொழில் புரிந்த ரக்கியா ஓமர் என்ற சோமாலிய சட்டத்தரணி அமெரிக்க தலையீட்டை எதிர்த்த படியினால் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இந்த அமைப்பின் தலைமை அமைப்பான "மனித உரிமை வார்ச்" என்ற அமைப்பு அமெரிக்கத் தலையீட்டை ஆதரித்த படியால் அதன் டைரக்டராக இருந்த அலக்ஸ் டி வால் தனது பதவியை இராஜினாமச் செய்துள்ளார். இவர்கள் இருவரும் வெளியிட்டிருக்கும் அறிக்கை, அமெரிக்கத் தலையீட்டினால் சோமாலியா மீண்டும் படுகுழிக்குள் தள்ளப்படப் போகின்றது என்பதைத் தெளிவாக்குகின்றது. அவர்களின் அறிக்கையின் சாரம்சம் வருமாறு;

'அமெரிக்கத்தலையீடு ஏற்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன்பு பல நம்பிக்கையூட்டும் விடயங்கள் நடந்தேறின. சோமாலிய மக்கள் தமது நாட்டின் தலைவிதியை தமது கைகளில் எடுப்பதற்கான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். 1992 ஒக்டோபர் 2 இல் சோமாலிய குலத்தலைவர்கள் தம்மிடையே ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்திருந்தனர். இது பல மாதங்களாக நடந்த யுத்தத்தை நிறுத்தவும், போர்வெறி கொண்ட தளபதிகளின் அதிகாரங்களை குலத்தலைவர்கள் பெறுவதற்கும் உதவியாக இருந்தது. தென் பகுதியில் உணவு விநியோகங்கள் சிறப்பாகவும் நடந்து கொண்டிருந்தன. பல பகுதிகளில் ஜலைக்கும் நவம்பருக்குமிடையில் இறப்பு வீதம் 90%த்தால் வீழ்ச்சியடைந்தது.

அரசியல் ரீதியாக குலத்தலைவர்களும் புத்திஜீவிகளும் பல கூட்டங்கள் நடாத்தி மக்களுக்கு நம்பிக்கைகளை ஊட்டினார். போர்த்தலைவனான மகமட் பரா அயிடடின் ஆதரவு பல இடங்களில் அருகி வந்தது. ஆனால் இந்தக் கூட்டங்களும் அமைப்புகளும் அமெரிக்கத் தலையீட்டினால் சிதறடிக்கப்பட்டன. அமெரிக்க தலையீட்டைப்பற்றி சோமாலியாவிலிருந்த மக்கள் குலத்தலைவர்களுடனோ, அல்லது அங்கிருந்த உதவி செய்யும் தொண்டர்களுடனோ

www.tamilarangam.net

கலந்தாலோசிக்கப்படவில்லை. ஒரு தலைப்பட்சமான இந்தத் தலையீடு இது வரைகாலமும் செயலாற்றியவர்களை நிலைகுலைய வைத்துள்ளது. மக்களிடம் செல்வாக்குள்ள குலத்தலைவர்களை உதாசீனம் செய்த அமெரிக்க இராணுவத் தலைவர்கள் யுத்தத்திற்க்கும் போருக்கும் காரணமான போர்க்குழுக்களின் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கும் அழைத்தனர். போர்க்குழுக்களின் தலைவர்களுக்கு அவசியமாகத் தேவைப்பட்டது சர்வதேச ரீதியாகத் தலைவர்கள் என அங்கிகரிக்கப்படுவதேயாகும். சோமாலிய மக்களும் அவர்கள் குலத்தலைவர்களும், இவர்களை யுத்தக் குற்றவாளிகளை எனக் கருதுகின்றனர். அமெரிக்கா இவர்களைத் தனக்குத் தேவையான ஆயுதம் தாங்கும் தலைவர்களாக்கி மக்கள் மீது திணிக்க முயலுகின்றது. '

அமெரிக்கத் தலையீடு சோமாலியா மக்களின் அடிப்படை உரிமைகளை அழித்து, ஆயுத வியாபாரத்தையும் தளங்களை குத்தகைக்கு விடும் தலைமைகளையும் தோற்றுவிக்கலாம். மத்திய கிழக்கையும் இந்து சமுத்திரத்தையும் மேற்பார்வையிடும் அமெரிக்கத் தளமாகவும் சோமாலியா அமையலாம். சோமாலியாவின் பட்டினியும் பசியும் ஐக்கிய நாடுகளின் குடையின் கீழ் மேலும் தொடரும் ..............

✍ முகிலன்



## இலக்கியச்சந்திப்பு

### - ஒரு அவசர மடல்

"இலக்கியச்சந்திப்பு"க்கு பல்வேறு முகங்கள். சிலருக்கு இது புத்தி ஜீவிகளின் அரட்டைக் கூட்டம், சிலருக்கு செத்துக் கொண்டிருக்கும் ஜனநாயகத்தை தக்க வைக்க ஓர் சத்திர சிகிச்சைக் கூடம். சிலருக்கு கோயில் திருவிழா. சிலருக்கு தமிழில் புதிய "அறிவொளி" இயக்கத்தின் வெளிப்பாடு. இதில் இரண்டாவது நிலைப்பாட்டை எடுத்தவன் நான். "இலக்கியச்சந்திப்பு" "ஆளுமை செலுத்தும் சிந்தனைக்கு" எதிரான ஒரு சிந்தனைக் கூட்டமாக கருதுபவன். இது ஒரு நடமாடும் பல்கலைக்கழகம், அத்துடன் ஒரு நடமாடும் மனநோய் சிகிட்சை நிலையமும் கூட. முக்கியமான இன்னுமொன்று. தலைமை இல்லாமல் எதுவுமே நடைபெறாத தமிழ்ச் சமுதாயத்தில் தலைமைத்துவம் (!) இல்லாமல் ஒரு சவால். என்ன திகைப்பா ?...

இலக்கியச்சந்திப்பு தனது பாதையில் பல்வேறு பாவங்களைச் செய்திருப்பது என்னவோ உண்மைதான். (பலரை ஒதுங்க வைத்தமை) ஆதிக்க மனப்பான்மை என்னவோ முற்றாக அற்றுவிட்ட ஒன்று அல்லத்தான். இருந்தும் இலக்கியச்சந்திப்பு ஜனநாயக சக்திகளினதும், புதிய சிந்தனை ஆதிக்கதினதும் இன்றியமையாத ஒரு கூட்டம்.

ஹேர்ணயில் ஆரம்பமாகி 12வது சந்திப்பில் மரணப்படுக்கையில் காப்பாற்றபட்டு பாரிசுக்குப்போய் வளர்ந்து வந்துள்ளது இச் சந்திப்பு. அத்துடன் பெண்கள் சந்திப்பும் இதன் மூலம் தான் ஆரம்பமாகியது(?) இச்சந்திப்பு பற்றி ஒரு சிலர் அவதூறாகப் பிரச்சாரம் செய்

தாலும், இலக்கியச்சந்திப்பு தனக்கு உள்ளும் வெளியிலும் இருந்து வரக்கூடிய ஆபத்துக்களில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அத்துடன் இது முன் எடுத்துக் கொண்ட வேலைத்திட்டங்களை தயக்கமில்லாது செயற்படுத்த வேண்டும்.கலை, இலக்கியம், அரசியலுக்குச் சமமான இடம் அளிக்கப்பட வேண்டும்.

ஒதுங்கிய நல்ல சக்திகளையும் புதியவர்களையும் சேர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பிழையான கூட்டு மனப்பான்மை வளர்ந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இலக்கியச்சந்திப்பு பற்றி அங்கலாய்ப்பவர்கட்கு,

இது எதற்கும் அஞ்சாத நக்கீரர்களைக் கொண்ட கூட்டு. ஜனநாயக நற்சிந்தனை உடைய அனைவரும் கலக்கலாம். அசோக்கின் (ஜைசயில்) ஆக்க பூர்வமான கருத்துக்களுக்கு நன்றி. சில சில 'ஜேர்னலிசத்தை' முற்போக்கு மூலாம் பூசி இலக்கியச்சந்திப்பில் கலந்து கொள்பவர்களுடன் "சமர்" செய்யும் வக்கிரப் போக்கை விடுவது ஆரோக்கியமானது.

நன்றி

ஸ்பாட்டலிஸ்ட்தாசன்

www.tamilarangam.net



# அயோத்தியும் இந்திய ஆளும்வர்க்கங்களும்

ரகு கிருஷ்ணா

மதம் ஏழைகளின் பெருமூச்சு என்பார்கள்.ஆனால் அதே மதம் ஆளும் வர்க்கங்களினால் அபினியாக மக்களுக்குக் கொடுக்கப்பட்டு மயக்க நிலைகளில் மோதலில் ஈடுபடவும் பாவிக்கபடுகின்றது. இன்று உலக முதலாளித்துவத்தின் பின்னடைவுகளில் இருந்து உருவாகும் சகல பிரச்சனைகளிலிருந்தும் மக்களைத்திசை திருப்ப தேசியவாதமும் மதமும் தாராளமாகத் தேவைப்படுகின்றன. இந்தவகையில் தான் இந்திய மதக்கலவரங்களையும் நோக்கவேண்டியுள்ளது.

1700 மரணங்களுக்கும் 5500 பேர் படுகாயமடைவதற்கும் காரணமான அயோத்தி பாபர் மசூதி இடிப்பு விவகாரம் இன்று இந்திய உபகண்ட அரசியலின் முக்கிய நிகழ்வாகியுள்ளது. டிசம்பர் 6 ம் திகதி உத்தர பிரதேச நகரமான அயோத்தியில் ஆயிரக்கணக்கான இந்து தீவிரவாதிகள் 16 ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பாபர் மசூதியைத் தகர்த்தனர். ராமனின் ஜனன பூமியான அயோத்தியில் ஒரு கோவில் கட்டுவதற்கான நடவடிக்கைகளின் விளைவு இது- இதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரங்களில் மதத்தின் பெயரால் நாடெங்கும் இரத்த ஆறு ஓடியது.இந்த நிலமைகள் உருவாவதற்கு காரணமாக இருந்த காங்கிரஸ் அரசாங்கமும் பாரதிய ஜனதாக்கட்சியும் கட்டுக்கடங்காத நிலமைகளைக் கைக்கட்டிப்பார்த்துக் கொண்டிருந்தன. நடவடிக்கைகள் என்ற பெயரில் உத்தரபிரதேச அரசாங்கம் பதவி நீக்கப்பட்டது. பாரதிய ஜனதாக்கட்சி தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். பாரதிய ஜனதாக்கட்சியின் கடந்த கால அரசியல் இவ்வாறான நிகழ்வுகளுக்கு இட்டுச் செல்லும் என்பதை யாரும் சந்தேகித்திருக்க முடியாது. உத்தரப்பிரதேசத்திலும் மற்றைய இரு மாநிலங்களிலும் கடந்த பொதுத் தேர்தலில் பதவிக்கு வந்த பாரதிய ஜனதாக்கட்சி, ஆட்சிபீடம் ஏறிய மாநிலங்களில் தமக்கு ஆதரவு குறைவதையும் ஆதரவாளர்களில் பெரும் பகுதியினர் அதிதீவிர வலது சாரி அமைப்புக்கான விஷ்வ இந்து பரிஷத் (VHP) மற்றும் ராஷ்த்திய சுவம் சேவக் (RSS) ஆகியவற்றை நாடிச் செல்வதையும் தடுக்க அயோத்தி ராமர் கோவில் விவகாரத்தில் அதிதீவிரம் காட்ட முற்பட்டது.அக்டோபர் மாத முடிவில் அயோத்தி ராமர் கோவில் விவகாரம் பற்றிய பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து கொண்டிருந்த சமயத்தில் விஷ்வ இந்து பரிவுத் தனது ஆதரவாளர்களை "கரசேவைக்காக" டிசம்பர் 6 ம் திகதி அயோத்திக்கு வருமாறு அழைப்பு விடுத்தது.இதைத் தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகள் முறிவடைந்தன.எனினும் நல்லதொரு முடிவு சுப்ரீம் கோட்டினால் எடுக்கப்படும் என அரசாங்கம் மக்களை நம்பச் சொல்லியது.ஆனால் இதே வேளையில் விஷ்வ இந்து பரிஷத்தும்,பாசிச ராஷ்த்திய சுவம் சேவக்கும் நாடு முழுவதும் கரசேவைக்கான பிரசாரங்களை விஷம் பாய்ச்சுவது போல செய்து கொண்டிருந்தனர். இதன் உச்சக்கட்டமாக பாபர் மசூதி தகர்ப்பும் இரத்தக்களரியும் ஏற்பட்டது.

காவியுடையணிந்து துறவிக் கோலம் பூண்டவர்கள் என்ன விதமான சுலோகங்களை உச்சரித்துக் கொண்டிருந்தாலும் அயோத்திப்பிரச்சனை ஆளும் காங்கிரஸ் கட்சிக்கும் பாரதிய ஜனதாக்கட்சிக்கும் அவர்களின் அடித்தளமாக விளங்கும் உயர்சாதி செல்வந்தர்களுக்கும் மிக அவசியமான சமூக,அரசியல் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தான் போகின்றது

www.tamilarangam.net

## மன்டேல் அறிக்கை

1990 களின் முடிவில் வி. பி. சிங்கின் ஜனதாதாள் அரசாங்கம் தனது தேர்தல் தேவைகளுக்காக மூடிவைக்கப்பட்டிருந்த மன்டேல் அறிக்கையை சட்ட பூர்வமாக்க முயற்சிகளை எடுத்தது.இந்த அறிக்கையின் பிரகாரம் தற்பொழுது உள்ள சட்டங்களினால் நன்மை பெறாத மிகவும் ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு அரசாங்கப் பொதுச் சேவைகளில் இடங்கள் ஒதுக்கப்படுவதற்கு வசதி செய்தது. இதற்கான சட்ட முலம் கொண்டு வரப்பட்ட பொழுது இந்து உயர் சாதியினரிடமிருந்தும் மற்றைய சாதியினர்களிடமிருந்தும் எதிர்ப்புக்கள் கிளம்பின. உயர்சாதி மாணவர்கள் தமது வேலை வாய்ப்புக்கள் பறிபோவதாக ஆர்ப்பாட்டம் செய்தனர். தேர்தலில் கண்ணாக இருந்த காங்கிரஸ் கட்சியும், பாரதிய ஜனதாக் கட்சியும் இந்த எதிர்ப்புகளுக்கு ஆதரவு வழங்கினர்.

பாரதிய ஜனதாக்கட்சி இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை இன்னுமொரு முனையில் முன்னெடுப்பதற்கு அயோத்தி ராமர் கோவிலைக்கண்டுப் பிடித்தது. நூற்றாண்டு காலமாக கோவில் தேவைப்படாத இராமனுக்கு அயோத்தியில் மசூதி உள்ள இடத்தில் கோவில் தேவைப்பட்டது. இதன் மூலம் உயர்சாதி இந்துக்களை தம்பக்கம் திரட்டி வாக்குப்பலத்தை அதிகரிக்க அது திட்டமிட்டது! அதே சமயம் ஒடுக்கப்பட்ட சாதியினர் தம்முள் அமைப்பாவதும் தடுக்கப்பட்டது. காங்கிரசும் பாரதிய ஜனதாவும் திட்டமிட்டபடியே ஜனதா அரசாங்கம் வீழ்ச்சியடைந்தது. மன்டேல் சட்ட மூலமும் சுப்ரீம் கோட்டில் போய் முடங்கியது. (நவம்பர் 16 ம் திகதி சுப்ரீம் கோட் தனது தீர்ப்பை சட்ட மூலத்திற்கு சாதகமாக வழங்கியதால் உயர்சாதி மாணவர்களின் எதிர்ப்புக்கள் மீண்டும் ஆரம்பமாகின.) ராஜீவ் கொலையுடன் காங்கிரஸ் தலைமைப்பீடத்தில் ஏற்பட்ட பலவீனங்களும் , பாராளுமன்றத்தில் பெரும்பான்மையின்மையும், பாரதிய ஜனதாக்கட்சியை அனுசரித்துப் போக வேண்டிய நிர்ப்பந்தங்களையும் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு உருவாக்கியது. அதே வேளையில் காங்கிரஸ் ஆட்சி நடை முறைப்படுத்த முனையும் தாரளப் பொருளாதாரத் திட்டங்களுக்கு கிராமியத் தனவந்தர்களையும் சேர்ப்பதற்கு பாரதிய ஜனதாவின் ஆதரவு காங்கிரசுக்கு அவசியமாகியது. அதே வேளை நாட்டின் முஸ்லீம் பணக்காரர்களினதும், முஸ்லீம் நாடுகளினதும் உறவுகளைப் பேணுவதற்கு பாரதிய ஜனதாவின் முஸ்லீம் விரோதப் பிரசாரங்களிலிருந்து எட்ட விலகி இருந்தது. ஆனாலும் ஆளும் வர்க்கங்களின் தலைமை தாங்கும் போட்டியில் ராமர் கோவில் விவகாரம் தீப்பற்றிக் கொண்டது.

இந்த நிகழ்வுகள் அயல் நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்த தலைவர்களுக்குத் தேவையான திசை திருப்பல்களுக்கும், மூச்சு விடும் அவகாசத்தையும் கொடுத்தது. பாகிஸ்தானில் டிசம்பர் 8ல் எதிர்ப்புத் தினம் கொண்டாடப்பட்டது. இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டன. பங்களாதேஷில் எதிர்ப்பு ஊர்வலங்கள் எல்லைகளைத் தாண்ட முயற்சித்தன !

இன்று உருவாகியிருக்கும் சூழ் நிலைமைகளில் - நாட்டின் தாரள பொருளாதார சீர்திருத்தங்கள் சாதாரண மக்களையும் தொழிலாளர்களையும் பாதிக்கும் நிலமைகளில்- அவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒடுக்கும் அவசியம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு ஏற்பட்டு வருகின்றது. இன்று ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்ளுக்கு அடிப்படையான காரணங்கள் இன்னும் தீர்க்கப்படாத பொருளாதாரப்பிரச்சனைகளாகவே இருக்கும் பொழுது -அதை தீர்பதற்கான பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டங்களைத் திசை திருப்ப , இன்று ஏற்பட்டிருக்கும் மதப்பூசல்களை இந்திய ஆளும் வர்க்கங்கள் பாவிக்க முயற்சிக்கலாம். 1975-77 களில் இந்திரா காந்தியின் ஆட்சியில் இந்து வலது சாரிகளுக்குக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்பட்ட அவசர காலச்சட்டம் இறுதியில் தொழிற்சங்கங்களையும் இடது சாரிகளையும் ஒடுக்குவதற்கே பாவிக்கப்பட்டது. அதே போல இன்றும் ஆளும் வர்க்கம் செயற்படலாம் ..........................



www.tamilarangam.net



# எண்ணங்கள்

உலகெங்கும் உதிர்ந்து கிடக்கும் அன்புத் தோழியர்கும் தோழர்க்கும்,

தனித்தனியாக தொடர்பு கொள்ளாமைக்கு மன்னிக்கவும். தொடர்புகளும் அற்றுப்போய் அலுத்துப் போய்க் கொண்டிருக்கின்றன. களைப்பும், மந்தமும் நம்பிக்கையீனமும் தற்போது எமது கூட்டாளிகளாகிவிட்டன. முன்பெல்லாம் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் வைத்திருந்த "விடைகளின்" சர்வதிகாரம் ஆதிக்கம் செலுத்த ( இதன் சிஷ்யர்கள் இன்னும் அங்காங்கே இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள் ) தற்போது என்னவோ எல்லாவற்றிலும் சந்தேகங் கொண்ட கேள்விக்குறிகளின் சர்வாதிகாரம்தான் தாண்டவமாடுகின்றது.

எம்மிடத்தில் இயல்பாக எழும்பும் அடக்கு முறை எதிர்ப்பு வாதத்தைக் கூட " எல்லாம் பொய் சொந்த அலுவலைப் பார்" என்ற ஆதி மூல மந்திரம் அடித்து அமர்த்தி விடுகிறது. நண்பர்கள் பல ர் " ஆளை விடு" என்கின்றனர். சிலர் " ஏதாவது செய்பவர்களுக்கு உதவும் " என்று அறிவை அழித்து மனச்சாட்சிக்குத் தீனி போடுகின்றனர்.

அந்நிய மண்ணில் கனவுகள் கூட நொடிப் பொழுதுதான் நிலைக்கின்றன. நம்பிக்கை நட்சத்திரங்கள் எல்லாம் இடிந்து கொண்டு போக எஞ்சியிருந்த நம்பிக்கையையும் ஈழவிடுதலைப் போராட்டம் அடித்துக் கொண்டு சென்று விட்டது. தற்போது கைகொடுப்பது என்னவோ "தேடலிசம்" தான். அதுவும் எத்தனை நாட்களுக்கு?
எதை நாம் முழு எதிரியாகக் கருதி போராட முனைந்தோமோ அதுவே இன்று பூதாகரமாகி " ஏலுமென்றால் பண்ணிப் பார் " என்கிறது. போட்டி முடிவடைந்து விட்டது. நான் வென்றுவிட்டேன். உலகம் என் கையில் என்கிறது. வரலாறு முடிந்து விட்டதாம். கனவுகளும் அப்படித்தானாம். உலகம் ஒரு கிராமமாம். CNN, DALLAS, MTV, MacDonalds தான் புதிய உலகத்தத்துவமாம். What we say, it goes ( நாங்கள் சொல்வதுதான் நடக்கும் ) என்கிறது.

www.tamilarangam.net

அன்பு நண்பி/ப,

எமது கண்களையும், சிந்தனைகளையும் சற்றுக் கூர்மையாக்குவோம். கேகலின் — மார்க்சின் இயங்கியலையும் எமக்குச் சற்றுத் துணையாக்குவோம். இப்போ பார்! நாம் பெரிதென நினைத்தது பெரிதல்ல. அதன் அழிவு அதற்குள்ளேயே இருக்கிறதைத் தெரிந்து கொள்வாய். அது வென்று விடவில்லை. எஞ்சி விட்டதுதான். ஆனால் ஒன்று. இது அழியும் போது உலகையும் அடித்துக் கொண்டுதான் செல்லும். அத்துடன் பல நாடுகளின் வறுமைதான் சில நாடுகளின் வளர்ச்சியென்றும் அறிந்து கொள். எம்மையும் சுற்றிப் பார். முன்பு போல் எமக்கு சிந்தனைத் தடை இல்லையே. விடைகளையே விற்பவர்களும் இனி இல்லை. இனி என்ன நிதானமாகத் தலை உயர்த்துவோம். தனித்தனியே சிந்தித்து, சலித்து ஒதுங்கி இருப்பதில் பயன் இல்லை. தொடர்புகளை உருவாக்குவோம். ஆம், உலகை ஒரு கிராமமாக்குவோம். ஒரேயடியாகப் பாய நினைக்காதே! வாழ்வையும் ரசிப்போம். ஒரு radical reformism (தீவிர சீர்திருத்தையும்)த்தையும் ஒரு revolution (புரட்சி)யையும் எதிர் எதிராய்ப் பார்க்காதே. எல்லாப் போராட்டத்திலும் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் எமது அளவு கோலாகக் கொள். ஜனநாயகமற்ற சோசலிசத்தையும், சோசலிசமற்ற ஜனநாயகத்தையும் ஏற்க மறுப்போம். மறுத்தலியலின் சக்தியாக மாறுவோம். நற்கலாசாரத்தின் மேலாண்மைக்காக பாடுபடுவதும், விழிப்புணர்வும் விமர்சனப் பார்வை கொண்ட சுயாதீன சமூகத்தை கட்டியமைப்பதையும், உலகெங்கும் சிதறிக் கிடந்தாலும், ஒரு சோசலிச சுயாதீன சமூகமாக , ஒரு "லொபியாக" மாறுவோம்.

ஈழத்திலும் இலங்கையிலும் நடக்கும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான குரலாக முதலில் நாம் ஒன்று படுவோம். ஒரே இலங்கை நிலைப்பதும் அரிது, தனித்தமிழ் நாடு கிடைப்பதும் அரிது என்ற நிலையில் சகல மக்களும் சுதந்திரமாக தமது கலை கலாச்சாரத்தைப் பேணக் கூடிய ஒரு அமைப்பின் நிர்ணய வேலையில் பங்கு கொள்வோம். எனக்கென்னவோ ஒரு சோசலிச ஈழம் - — சோசலிச ஸ்ரீலங்கா கூடத்தான் தீர்வாக இருக்க முடியும். போல் தெரிகிறது. இருக்கும் நாட்டிலும் நிறவாதத்திற்கு எதிராகவும், ஏகாதிபத்தியத்திய சுரண்டலுக்கு எதிராகவும் குரல் கொடுப்போம்.

ஏதோ எழுதிவிட்டேன். உங்கள் கருத்துக்களையும் நடைமுறை வழிகளையும் மிகவும் ஆவலுடன் எதிர் பார்க்கிறேன். பதில் போட மறக்க வேண்டாம்.

நன்றி

பாரதிதாசன்.

www.tamilarangam.net



காவியத்திற்குப் பின்னுரை எழுத வேண்டியதுதான் இப்பொழுது பாக்கி. என் கவிதைகளை பிரசுராலயத்தார் படித்துப் பார்க்கக் கூடத் துணிய மாட்டேன் என்கிறார்கள். காலத்தின் கோளாறு இது. கோளாறு அல்ல; விதி. நாமெல்லோரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தே ஆக வேணும். என் காவியத்தின் பின்னுரைக்குப் பெயர் இப்படி இடலாம். "நீலப்பட்சி நீலவானில் பறந்தோடிப் போயிற்று."

நடு வசந்தம். மரஞ்செடி கொடிகள் எல்லாம் பூத்திருக்கின்றன. மேகங்கள் காலையிலே சிவந்தும், மாலையிலே வெளிரிட்டும் காண்கின்றன. மரத்தளிர்களை அசைக்கும் தென்றல் வீசுகிறது. தொப்பிகளில் ரிப்பன்களும் அத் தென்றலில் அசைகின்றன. கார்சின் நாட்டுப்புறம் போகவில்லை. இதோ புது ஆடை உடுத்து க.்.பே பினோம்பியோவுக்கு வருகிறான். அவன் முகம் வெளிரிட்டு இருக்கிறது. அதில் அரும்பியிருக்கும் புன்னகையின் சோகம் தான் என்ன.

"நண்பர்களே என்னை அணைத்து அன்புடன் போக விடைதாருங்கள். நீலப்பட்சி பறந்தோடி விடப் போகிறது."

பாவம். கார்சின் அழுதான். எங்கள் கைகளையெல்லாம் பிடித்து வேகமாகக் குலுக்கி விட்டு ப் போய்விட்டான்.

நாங்கள் எல்லோரும் எங்களுக்குள் பேசிக் கொண்டோம்! கார்சின் தன் தகப்பனாரிடம் போய் விட்டான். கவிதையே! விடை பெற்றுக் கொள்கிறேன். கலையே! போய் வரட்டுமா? நமது கவி நார்மண்டியில் தன் தகப்பனார் கடையில் துணிமணி அளந்து கணக்கெழுதப் போய் விட்டான். அவ்வளவுதான். பாய்! அப்சிந்தே கொண்டு வா.


மறு நாள் க.்.பே பினோம்பியோ போகும் வாடிக்கைகாரர்கள் எல்லாம் கார்சினுடைய அறைக்குப் போனார்கள். அவர்கள் முகமெல்லாம் வெளுத்திருந்தது. அவர்கள் பயந்தவர்களாய் துக்கம் நிறைந்தவர்களாய் இருந்தார்கள். கார்சின் இரத்தக் கறை பட்டிருந்த படுக்கையில் கிடந்தான். அவன் மண்டையிலே ஒரு துப்பாக்கி ரவை பாய்ந்திருந்தது. தலையணை மேல் அவன் மூளை சிதறிக் கிடந்தது. ............ பயங்கரம்!

அதிர்ச்சியும், பயமும் நீங்கி நாங்கள் அவனுடலைப் போட்டுக் கொண்டு அழ ஆரம்பித்த போது அவனுக்கருகே அவனது சிறந்த காவியம் கிடப்பதைக் கண்டோம். அதன் கடைசிப் பக்கத்தில் பின்வருமாறு அவன் எழுதியிருந்தான்.

"வசந்தத்தின் மத்தியில் இன்று நான் நீலப்பட்சி அடைபட்டுக் கிடக்கும் கூட்டின் கதவைத் திறந்து விட்டேன். "

★ ★ ★

ஆ! கார்சின்! கார்சின்! உலகில் உன்னைப் போல அவதிப்படுபவர்கள் எவ்வளவோ பேர்!



www.tamilarangam.net

# இலக்கியச்சந்திப்பு

1988 செப்டம்பர் மாதம், ஜேர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகளின் ஆசிரியர்கள், ஆக்கதாரர்கள், வாசகர்கள் ஆகியோர் சந்திக்கும் ஓர் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. ஹேர்ண நகரில் ஆரம்பித்த இந்த முதலாவது இலக்கியசந்திப்பு நான்கு வருடங்களாகத் தொடர்ச்சியாக நடைபெற்று 14வது இலக்கியச்சந்திப்பைப் பாரிசில் வெற்றிகரமாக நடத்தி ஒரு ஐரோப்பிய சந்திப்பாக பரிமாண வளர்ச்சி பெற்றுள்ளது. இந்த நான்கு வருடங்களிலும் --- 14 சந்திப்புக்களிலும் ஏற்பட்ட வளர்ச்சிகள், பின்னடைவுகள், தவறுகள் இவற்றுடன் நான்கு வருடங்களாகத் தொடருபவர்கள், இணைந்தவர்கள், காலப்போக்கில் பிரிந்தவர்கள் .................. இப்படியானவர்களுடன் இலக்கியச்சந்திப்பு என்ற "அமைப்பு ", விவாதங்கள், விமர்சனங்கள், சுயவிமர்சனங்கள் ஆகியவற்றினுடாக வளர்ச்சி பெற்றுக் கொண்டு செல்லுகின்றது. இந்த அனுபவங்களை மீள அசை போட்டு, வருங்காலப் பாதைகளைச் செப்பனிட வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

இலக்கியச்சந்திப்பானது ஐந்தாவது வருடத்தில் காலெடுத்து வைக்கும் பொழுது இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்த திரு. பீட்டர் ஜயரத்தினம், பார்த்திபன் ஆகியோருக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

புலம் பெயர்ந்த பத்திரிகை ஆசிரியர்கள், ஆக்கதாரர்கள் ஆகியோர் சஞ்சிகைகளில் வெறும் "எழுத்துக்களாக" இல்லாமல் நேரில் கண்டு பேசி, விமர்சித்து, பழகி, நாகரிகமாகக் கருத்துப் பரிமாறல்கள் செய்யக் கூடிய களமாக இந்த இலக்கியச்சந்திப்பு அமையப் போகின்றது என்பதை முதலாவது இலக்கியச்சந்திப்பிலேயே உணரக் கூடியதாக இருந்தது.

முதலாவது, இரண்டாவது (டோற்முண்ட்) இலக்கியச்சந்திப்புக்களில் "இலக்கியத்தில் அரசியல்" என்ற விடயமே ஆழமாக விவாதிக்கப்பட்டது. இன்று எமது மக்கள் வாழும் சூழ்நிலமைகளில், அரசியல் தஞ்சம் கோரிப் புலம்பெயர்ந்து வாழும் மக்களினால் வெளியிடப்படும் சஞ்சிகைகளில் அரசியலற்ற இலக்கியம் இடம் பெற வேண்டுமென்றவர்களின் வாதங்கள் அடிபட்டுப் போயின.

மூன்றாவது இலக்கியச்சந்திப்புடன் இலக்கியத்திலும், அரசியலிலும் துணிகரமான விமர்சனங்களுக்கு முகம் கொடுக்க விரும்பாதவர்கள் பலர் விலகிக் கொண்டனர். இந்த இலக்கியச்சந்திபிலேயே "இலக்கியச்சந்திப்பை" நடத்துவதற்கு ஒரு நிரந்தரக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென்ற விடயத்திற்குத் தீர்வு காணப்பட்டது. நிரந்தரமான அதிகாரத்துவக்குழுவோ, "தலைவர்களோ" உருவாகாமல் ஒவ்வொரு இலக்கியச்சந்திப்பை நடத்துவதற்கும் ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் எந்த தனி நபர், "குழு" ஆதிக்கமுமின்றி சகலரும் பங்கு கொள்ளும் இலக்கியச்சந்திப்பாக நான்கு வருடங்களைப் பூர்த்தி செய்து மேலும் தொடருகின்றது..........................

தொடர்ந்து வந்த இலக்கியச்சந்திப்புக்களில் புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புக்களின் ----- சிறுகதைகள், கவிதைகள்... ---- விமர்சனங்கள், கவிதா நிகழ்வுகள், இன்னும் பல நிகழ்ச்சிகள் குழுக்களில் அங்கம் வகித்தவர்களின் இலக்கிய ஆவலுக்கேற்ப இடம்பெற்றன. பேர்லின் அதைத் தொடர்ந்து கிரேபீல்ட் ஆகிய நகரங்களில் நடைபெற்ற இலக்கியச்சந்திப்புக்களில் இசையும் நாடகமும் நிகழ்ச்சிகளில் சேர்க்கப்பட்டன. பாரிசில் நடைபெற்ற இலக்கியச்சந்திப்பில் "அருச்சுனன் தபசு" என்ற கிராமிய நாடகம் இடம் பெற்றது. பொண் நகரில் இடம் பெற்ற சந்திப்பில் சூழல் மாசடைதல் பற்றிய விஞ்ஞான ஆய்வு நிகழ்ச்சியும், 500 வருட காலனித்துவம் பற்றிய நிகழ்சியும் பலரைக் கவர்ந்தது. இவ்வாறு பல் வேறு விடயங்களைப்பற்றிக் கலந்துரையாடக் களமாக அமைந்திருக்கும் இலக்கியசந்திப்பு, தன் வளர்ச்சிப் போக்கில் தனக்கெனச் சில நடைமுறைகளையும் உருவாக்கிக் கொண்டது.

இந்தப் பதிநான்கு சந்திப்புக்களிலும் நாம் கற்றுக் கொண்டவை பல. செய்தவை சில. செய்யாதிருப்பவை பல. செய்ய வேண்டியவை மிக மிக................. கடந்த கால அனுபவங்களிலிருந்து "இலக்கியச்சந்திப்பு" என்ற நிகழ்ச்சியை இன்னும் பிரயோசனமுள்ள ஒரு ஐரோப்பியச் சந்திப்பாக்க வேண்டிய தேவை ஒன்று உருவாகியுள்ளது. ஐரோப்பாவில் வாழும் தமிழர்கள் நான்கு மாதத்திற்கு ஒரு முறை சந்திக்கின்றார்கள், பேசுகின்றார்கள், விமர்சிக்கின்றார்கள் என்பது மட்டும் போதாது. இந்தச்சந்திப்புக்களில் எடுக்கப்படும் தீர்மானங்களும், நடவடிக்கைகளும் மேலும் அர்த்தமுள்ளவையாக்கப்பட வேண்டும். இலக்கியசசந்திப்பு வெறும் இலக்கிய மேடையல்ல என்பதைக் கடந்த கால அனுபவங்கள் காட்டியுள்ளன. இன்றைய அரசியல் நிலமைகள், மனித உரிமை மீறல்கள் ............ இவை பற்றியெல்லாம் ஐரோப்பா வாழ் தமிழர்களின் குரலாக இச்சந்திப்பு ஒலிக்க வகை செய்யப்பட வேண்டும். . இதற்கான கருத்துக்கள், நடவடிக்கைகள் எல்லாம் வருங்கால இலக்கியச்சந்திப்புக்களில் விவாதிக்கப்பட வேண்டியவை, நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை.



www.tamilarangam.net

# எங்களுக்கோர் வாழ்வு இனி யாழ்ப்பாணத்தில் இல்லை

## – அகதி முகாம்களில் வாழும் முஸ்லீம் மக்கள்.

தென்னாசிய நிறுவனத்தின் சஞ்சிகையில் வால்டர் கெலர் எழுதிய கட்டுரையின் சுருக்கம்

தமிழில் : சந்துஷ்

கொழும்பிலிருந்து அனுராதபுரம் நோக்கி மேற்குக்கரையோரமாக விரியும் வீதி கிளையாகப் பிரியுமிடத்தில் அமைந்துள்ளது மீன்பிடிப் பிரதேசமான புத்தளம். அனேகமான உல்லாசபிரயாணிகள் செல்லும் பஸ்வண்டிகள் இங்கு நிறுத்தப்படுவதில்லை. பிரயாணிகள் தங்களுக்குத் தேவையான தே நீர் போன்ற பானங்களை வாங்குவதன் பொருட்டு இவை வாடிவீடுகளிலிருந்தே தமது பயணத்தை ஆரம்பிக்கின்றனர். புத்தளம் வழங்குவதற்கு குறைவான வளங்களைக் கொண்ட பிரதேசம். புத்தளத்திலிருந்து வடகிழக்கிற்காக வளைந்து செல்லும் வீதியில் இந்த பஸ்கள் புராதன சிங்களஅரச நகரான அநுராதபுரத்தை நோக்கிய தமது பயணத்தைத் தொடர்கின்றன. இந்த புத்தளப் பிரதேசம் தான் கடந்த இரண்டு வருடங்களிற்கும் மேலாக பத்தாயிரக்கணக்கான முஸ்லிம் அகதிகளின் உறைவிடமாக இருந்துவருகின்றது. இவர்கள் தமிழர்களை பெரும்பான்மையாகக்கொண்ட யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து வந்த அகதிகளாவர். அநுராதபுரத்தை நோக்கிச் செல்லாமல் வடக்கே நோக்கிச் செல்லும் பள்ளமும் திட்டியுமாக விரியும் சிறியவீதியில் பயணிக்கையில் விரைவில் வரிசைவரிசையான துயரங்களினைத் தரிசிக்கலாம். ஒன்றையடுத்து ஒன்று அடுக்கடுக்காக அகதிமுகாம்கள், இவை கிடுகினாலான கூரைகளைக்கொண்ட சிறிய குடிசைகள். 50லிருந்து 100 வரையிலான இத்தகைய தற்காலிக உறைவிடங்களே இங்கு "அகதிமுகாம்களாக" காட்சி தருகின்றன. "யாழ் முஸ்லிம்கள் அகதிமுகாம் என்றோ "மன்னார் முஸ்லிம் அகதிமுகாம்" என்றோ இந்த முகாம்களைக் குறிக்கும் பெயர்ப் பலகைகள் வீதியோரமாக காணப்படுகின்றன. முகாம்களுக்கு முன்னால் விளையாடியபடி சிறுவர்கள், அங்கு கட்டப்பட்ட தொட்டிகளிலிருந்து குழாய்களில் தண்ணீர் பிடித்துக் கொண்டு பெண்கள், அனேகமான ஆண்கள் நிழல் விழும் பகுதியில் சோர்ந்துபோன நிலையில் அமர்ந்திருக்க மற்றையவர்கள் அங்கு தற்காலிகமாகக் கட்டப்பட்டிருக்கும் மசூதிக்கு முன் நிற்கின்றார்கள். தனது பசுவிற்கு ஏதாவது உண்ண கொடுப்பதற்காக புற்கள் இருக்கும் பகுதிக்கு அழைத்துச் செல்கிறார் முதியவர் ஒருவர். இங்கு மிகச்சிலருக்கே வேலை செய்யும் வாய்ப்பிருக்கிறது. புத்தளம் "பாலைவனத்தில் ஒரு பசுந்தரையல்ல". மீன்பிடி தவிர மிகக்குறைந்தளவிலானதாகவிருக்கும் ஆடு மாடு வளர்ப்பே இந்த மாவட்டத்தின் வருமானந்தரும் தொழிலாகவுள்ளது. வறண்ட இந்த தரிசு நிலப்பகுதியில் அதுவும் பெரும்பாலும் உவர்நிலமாதலால் பெருமளவிலான அகதிகளுக்கு சொந்தவூர் மக்களைவிடவும் தொழில் செய்துவாழும் வாய்ப்புக்கள் குறைவாகவேயுள்ளன.

"தேவையானபோது எங்களுக்குக் கூலிவேலைகள் கிடைக்கிறது அரிசியையும் உலர்பழங்களையும் அரசாங்கம் எமக்கு வழங்குகிறது. அரச திணைக்களத்தைச்சேர்ந்தவர்கள் மாதமொருமுறை வந்து அத்தியாவசியப்பொருட்களை பங்கிட்டு வழங்கிச் செல்கின்றனர். இவற்றுடன் " Service Civil International " போன்ற சுயாதினமான நலன்புரி அமைப்புகளும் , முஸ்லீம் அமைப்புகளும் உதவியளிக்கின்றன. " என்றார் 1990 ஆண்டு ஒக்ரோபர் மாதந்தொடக்கம் இங்கு வாழும் ஐவரைக் கொண்ட குடும்பத்தை சார்ந்த நாற்பது வயது மதிக்கத்தக்க மொகைதீன்.

" விடுதலைப்புலிகள்(LTTE) எங்களை யாழ்ப்பாணத்தைவிட்டு விரட்டிவிட்டார்கள். தாயகம் திரும்புவதென்பது தற்போது சாத்தியமற்றது. யாழ்ப்பாணத்தில் புலிகளின் ஆளுமையே நிலவுவதால் அங்கு வாழ்வதற்கான வாய்ப்பேதுமில்லை. "

மொகைதீன் குடும்பத்தைப்போலவே வடமேற்கிலங்கையில் வாழ்ந்த ஏறத்தாழ 50 000 முஸ்லீம்கள் நோக்கேதுமற்ற வரையறை செய்யப்பட்ட வாழ்வினை அகதிமுகாம்களில் கழிக்கின்றனர். உத்தியோகபூர்வமான விபரங்களின்படி இவர்களில் 30 000 பேர் புத்தளம் மாவட்டத்திலுள்ள 62 முகாம்களில் "வாழ்கின்றனர்". மற்றையவர்கள் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் பலருக்கு கொழும்பில் குடியேறும் நோக்கமிருந்தது.

இலங்கையின் அரசியற் குழப்பநிலையின் ஒரு முகமே மொகைதீனதும் அவர் போன்ற மற்றய முஸ்லீம்களதும் பிரச்சினைகள்.

www.tamilarangam.net



30 மாதங்களாக அகதிமுகாம்களில் வாழும் முஸ்லீம் சிறுவர்கள் படம்:Walter Keller

## தனித்துவமான இனக்குழு

"மூர் " என்றும் அழைக்கப்படும் , மொத்த சனத்தொகையில் 7% மீதமான ( 1,2 மில்லியன் ) முஸ்லீம் மக்கள் இன்று இலங்கையின் தனித்துவமானதோர் இனக்குழுவாகக் கருதப்படுகிறார்கள். இலங்கையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினர் ,தமிழர்,பெரும்பான்மையாகவுள்ள வடக்கையும், இரண்டில் மூன்று பங்கினர்,சிங்களவர், பெரும்பான்மையாயுள்ள தெற்கு , தென்மேற்குப் பகுதியையும் வாழ்விடங்களாய் கொண்டவர்கள். பலருக்கு சிங்களமொழியில் தேர்ச்சியிருப்பினும் தமிழே இவர்களின் தாய்மொழியாகவுள்ளது.

நூற்றுக்கணக்கான வருடகாலம மற்றைய இனங்களினங்களினால் சூழப்பட்டு அவர்களுடன் இணைந்த ஒரு இனக்குழுக்களாக வாழ்ந்துவிட்டதால் அவர்களுக்கென பொதுவான சம்பிரதாயங்களை வளர்த்துக்கொள்ள முடியாமல் போயிற்று. தனித்துவமான உணவுமுறைகள் , தனித்துவமான திருமண சட்டங்கள் என்பன விதிவிலக்குகள். பல மரபுகளும், வழக்கங்களும் இவர்களைச் சூழவிருக்கும் சிங்கள தமிழ் சமூகக் கட்டமைப்பின் தன்மைகளையே கொண்டிருக்கின்றன.

முஸ்லீம்கள் முதலில் பிரித்தானிய காலனியாதிக்க காலத்திலிருந்தே தனித்துவமான இனக்குழுவாகத் தம்மை இனங்காட்டுவதில் ஆர்வங்காட்டியுள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை இவர்கள் இஸ்லாமியத் தமிழர்களாகவே அழைக்கப்பட்டார்கள்.

ஒரு சிறிய நகர்ப்புற வசதி படைத்த முஸ்லீம்களின் உயர்வர்க்கமானது இந்த இனக்குழுவின் தலைமையை எடுத்துக்கொண்டது. நாளடைவில் மொழியை வைத்துத் தம்மை இனங்காட்டுவதை விடுத்து அரபு வர்த்தகர்களினதும் முகமது நபி போன்ற தீர்க்கதரிசிகளினதும் வழித்தோன்றல்கள்தான், முஸ்லீம்களென்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

இந்த இனக்குழுவின் அடையாளத்தின் மாற்றீடு, மொழியை விடுத்து மதத்தை முதன்மைப்படுத்திச் செய்யப்பட்டது. தாங்கள் அராபிய வழித்தோன்றல்கள் என்ற சிந்தனை முதலில் மேற்குப்பகுதியில் எதிரொலித்தது, பின்பு மெல்ல மெல்லவே கிழக்குப்பகுதிக்கும் பரவியது.

## தொடரும் பிளவுகள்

இலங்கையில் பல ஆண்டுகளாகத் தொடரும் சிங்கள தமிழ் மக்களிடையேயான இனமுரண்பாட்டினால் தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையே வரலாற்று ரீதியாக வழங்கிவந்த நல்லுறவுகள் மிகவும் பாதிக்கப்பட்டன. எண்பதுகளின் தொடக்கத்தில் இது இன்னும் விரிசலடைந்தது. இதற்குக் காரணம், பல்வேறு வகைகளில் தோற்றம்பெற்ற ஆயுதம் தாங்கிய விடுதலை இயக்கங்கள், முஸ்லீம் மக்களை, அவர்கள் தமிழ்பேசும் மக்களென்பதால், தங்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்குள் வலிந்து உள்ளடக்கியமையே . பெரும்பான்மையினர் இதை நிராகரித்ததுடன் கலாசார ரீதியிலான தமது தனித்துவத்திற்காக குரல் எழுப்பினர். விடுதலை இயக்கங்கள் முஸ்லீம்களின் பிரதிநிதிகளை தமக்குள் தெரிவுசெய்ய முனைந்தபோது பிரச்சனைகள் மோசமடைந்தன என்று கூறலாம்.

தமிழ் முஸ்லீம் மக்களிடையே வளர்ந்து வந்த பிளவுகளை அரசு தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது. கிழக்கில் நிலை கொண்ட இலங்கைத் துருப்புக்கள் தமிழ் ஆயுதக்குழுக்களை மேப்பம்பிடிப்பதற்காக முஸ்லீம்களின் உதவியை அடிக்கடி நாடினார்கள்.. இது புலிகளின் பார்வையில் எல்லா முஸ்லீம்களும் -- எதிரிகளும் எட்டப்பர்களும் -- தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்ற எண்ணம் உச்சத்தை அடைந்தது.

www.tamilarangam.net

யாழ்மாவட்ட முஸ்லீம் அகதிகள் சங்கப் பிரதிநிதியான வழக்கறிஞர் மன்சூர், இன்று கொழும்பில் வாழவேண்டிய நிலையிலுள்ளார். 30 அக்டோபர் 1990 முஸ்லீம்களின் வரலாற்றின் மறக்கமுடியாத அந்த நாளை மீண்டும் நினைவு கூர்ந்தார்..

"சகல முஸ்லீம்களும் அதிகாலை எட்டுமணிக்கு ஜின்னா மைதானத்திற்கு வந்து விடவேண்டுமென்று சுமார் ஏழு மணியளவில் ஆயுந்தாங்கிய புலிகளினால் ஒலிபெருக்கியின் மூலம் அறிவிக்கப்பட்டது. ஜின்னாத்திடலில் கூடிய மக்களுக்கு,

"முஸ்லீம் எனப்படுபவர்கள் யாழ்ப்பாணத்தில் இனியொருபோதும் அனுமதிக்கப்படமாட்டார்கள்" என்று புலிகளின் தலைவரொருவரால்கூறப்பட்டது. கிழக்குப்பகுதியில் முஸ்லீம்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலான சண்டையின் எதிரொலியாகவே இந்த நடவடிக்கை என்றார்கள். அடுத்துவரும் இரண்டுமணிநேரத்துக்குள் அனைத்து முஸ்லீம்களும் கண்டிப்பாக வெளியேறிவிட வேண்டும் என்றார்கள்."

எந்தெந்த வீதிகள் வழியாக முஸ்லீம் மக்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருந்ததை இன்னமும் மன்சூரால் நினைவு கூர முடிகிறது.

"நாம் கொல்லப்படுவோம் என்றும் மிரட்டப்பட்டதாலேயே நாம் அவ்விடமிருந்து உடனேயே புறப்பட வேண்டியதாயிற்று. இரு நூறு ரூபாய்களையே அவர்கள் எங்களைக் கொண்டுவர விட்டார்கள். இந்தப் பணத்துடனேயே தெற்கு நோக்கி நாங்கள் வந்தோம். புத்தளத்தை வந்தடைய ஐந்து நாட்கள் எடுத்தன." என்றார் அன்றிலிருந்து தனது மனைவியுடனும் மூன்று பிள்ளைகளுடனும் திரும்பிச் செல்வதற்கான நம்பிக்கை இழந்த நிலையில் ஒரு அகதி முகாமிற்குள் வாழும் முகைதீன்.

" எங்களுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர்களுடன் எவ்வித பிரச்சனையும் இருந்ததில்லை. குறைந்தது 500 வருடங்களாவது முஸ்லிம்கள் அங்கு வாழ்ந்து வந்துள்ளனர். இப்பொழுது அங்கு ஒருவர் கூட இல்லை. " என்று சொல்லும் முகைதீனும் புலிகளின் பார்வையில் ஒரு குற்றவாளி. முஸ்லீம்களின் இந்த வெளியேற்றத்துடன் தமிழ் முஸ்லீம் உறவினில் மேலும் ஒரு பின்னடைவு ஏற்பட்டது. ஆனால் புலிகளின் நடவடிக்கைகளில் மாற்றம் ஏதும் இருக்கவில்லை. முஸ்லீம்கள் தனிப்பட்ட ரீதியாகவோ குழுவாகவோ இவர்களின் கொலை வெறிக்கானானார்கள். மசூதிகள் தாக்கப்பட்டதுடன் முஸ்லீம் கிராமங்கள் வேட்டையாடப்பட்டன. கடந்த இரண்டு வருடங்களுக்குள் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த மக்களைப் பாதுகாப்பதெனக் கூறி முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் திரட்டி ஆயுதம் வழங்கி அமைக்கப்பட்ட "ஊர்காவற்படை" புலிகளுக்கெதிராகச் செயற்படுவதை விடவும் அப்பாவித் தமிழர்களைத் தாக்குவதிலேயே ஈடுபட்டது.. இவர்கள் இராணுவம் பொலிஸ் ஆகியவற்றின் அங்கமாகவே செயற்பட்டனர். கிழக்கிலங்கையின் பயங்கரவாதமும் எதிர் பயங்கரவாதமும் கடந்த வருடங்களில் இவ்விதமே காட்சியளித்தன. தமிழ் கெரிலாக்களின் முஸ்லிம்கள் மீதான தொடர்ச்சியான தாக்குதல்கள், முஸ்லிம்கள் தமது தனி இன அடையாளத்தை நிலைநிறுத்தும் முகமாக முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியைத் தோற்றுவிக்கக் காரணமாயினர். 1948ல் இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு அவ்வப்போது ஆட்சி செய்த சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளான யு.என்பி., எஸ்.எல்.எப்.பி என்பவற்றைச் சார்ந்திருந்தார்கள். முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஏற்கனவே ஜிகாத் என்ற புனிதப் போரைப் பிரகடனப்படுத்தியுள்ளார். அத்தோடு புலிகளுக்கெதிராகப் போரிடுவதற்கு இலங்கை இராணுவத்துக்குள் முஸ்லிம் படைப்பிரிவொன்றை அமைக்குமாறு இலங்கை அரசைக் கேட்டுள்ளார். புலிகளுக்கெதிரான யுத்தத்திற்கு முஸ்லிம் இளைஞர்கள் ஆயுத்தமாக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கையில் ஏற்படும் சமாதானத் தீர்வானது தமிழ் சிங்கள மக்களின் அபிலாஷைகளை மட்டுமல்ல முஸ்லிம்களின் விருப்பங்களையும் கவனத்திலெடுத்தே காணப்பட வேண்டும். கிழக்கிலங்கையில் இனக் குழுக்கள் கலந்து வாழும் பகுதிகளில் தமிழர்கள் இணைந்த ஒரு அரசியல் தீர்வுக்கு குறைந்த அளவிலான முஸ்லிம்களே விருப்பம் தெரிவிக்கின்றார்கள். ஆனால் பிரச்சனைகளுக்கான ஒரு பொதுவான தீர்வை இன்னும் காண முடியவில்லை. தீர்வு காணுமுகமாக உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சிறிய கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளும் தீர்வுக்கான தமது யோசனைகளைத் தெரிவித்துள்ள போதும் யு.என்.பி, எஸ்.எல்.எப்.பி ஆகிய இரண்டு பெரிய கட்சிகளும் தீர்வு எதையும் முன் வைக்கவில்லை. வட கிழக்குப் பகுதிகளில் உள்ள அகதிகளின் எண்ணிக்கை ஆறு இலட்சம் என்று புனர்வாழ்வு அமைச்சின் அறிக்கை சொல்லுகின்றது. நாளுக்கு நாள் அதிகரித்தும் ஒரு தீர்வு காண முடியாத நிலையிலும் நடைபெற்று வரும் யுத்தத்தில் தனித்து விடப்பட்டவர்களாக, தமது வாழ்வு சீர்குலைந்த நிலையில் மக்கள் நாட்களைக் கடத்துகிறார்கள். 1990ன் நடுப்பகுதியிலிருந்து இன்று வரை 20,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இலட்சக் கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளனர்.

கடந்த வருடம் நாலு இலட்சம் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இந்த "சுவர்க்கத்திற்கு" வருகை தந்துள்ளார்கள். இவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு இலங்கை பற்றிய அழகிய படம் இன்னமும் மங்கிவிடவில்லை.

www.tamilarangam.net

# ஜேர்மனியில் நாசிகள்



கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் பத்து லட்சம் மக்களுக்கு அதிகமாகக் கலந்து கொண்ட இனவாத எதிர்ப்பு ஊர்வலங்களுக்குப் பின்பு ஜேர்மனியில் இனவாதம் பற்றிய விவாதங்கள் இருவகையாக அமைந்திருந்தன. முதலாவது, முக்கிய அரசியல் கட்சிகளான CDU (கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சி), SPD (சோசலிசகட்சி) , FDP (சுதந்திர ஜனநாயகக்கட்சி) ஆகியவற்றிடையே ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரும் உரிமையைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் செய்யப்பட இருந்த ஒப்பந்தம் பற்றியதாகும். இரண்டாவதும் முக்கியமானதுமான நவம்பர் 23 ம் திகதி மொல்ன் என்ற நகரத்தில், பாசிச வாதிகளின் தாக்குதலின் போது தீக்கிரையாகி மரணித்த மூன்று வெளிநாட்டுப் பெண்களின் முடிவு பற்றியதாகவிருந்தது.

இந்த தொடர்ச்சியான மரணங்களும் எரியும் வெளிநாட்டவர்களின் வாசஸ்தலங்களும்- இந்த பயங்கரமான இனவாத அலைக்கு அடிப்படை என்ன? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

ஜேர்மனியில் உள்ள இனவாதத்திற்கு நீண்ட காலமாக இருக்கும் நடை முறைகளும் சமீபகால மாற்றங்களும் அடிப்படையாக அமைகின்றன.

எல்லா ஏகாதிபத்திய நாடுகளிலும் இன்று இனவாதம் இருக்கின்றது.ஆனால் ஜேர்மனியிலுள்ள இனவாதத்திற்கு இரு தன்மைகள் இருக்கின்றன. முக்கியமானது ஜேர்மன் பிரஜாவுரிமையானது இனவாத அடிப்படையிலேயே அமைந்துள்ளது. உதாரணமாக; முன்னைய சோவியத் யூனியிலுள்ள எவராவது ஜேர்மனிக்குள் வந்து தான் ஜேர்மன் இன அடி இருப்பதாக நிரூபித்தால் அவர் ஜேர்மன் பிரஜையாக ஏற்றுக்கொள்ளப்படுவார் ஆனால் ஜேர்மனியில் 40 வருடங்களுக்கு மேலாக வாழும் ஒரு துருக்கி இனத்தைச் சேர்ந்தவர் ஜேர்மன் பிரஜையாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்.

அடுத்ததாக இன்று ஜேர்மன் தொழிற்சங்கங்களும் SPD யிலுள்ள ஜனநாயகவாதிகளும் தமது சோசலிச முன் நோக்கினை எப்போதோ இழந்து விட்டனர். முன்னைய கிழக்கு ஜேர்மனியில் ஸ்டலினிசத்தால் ஏற்பட்ட பின்னடைவுகள் இவற்றை மேலும் வலுப்படுத்துகின்றன. சங்கங்களில் இணைந்துள்ள தொழிலாளர்கள் சீர்திருத்தவாதிகள் என்ற நிலையிலிருந்து அடிப்படையான பிற்போக்குவாதத்திற்குள் மூழ்கியுள்ளனர்

இந்த நிலைமைகள் வலது சாரிகளினதும் பாசிசவாதிகளினதும் சமூக அடித்தளங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. குடியரசுவாதிகள் ( Repalicans) மற்றும் ஜேர்மன் மக்கள்கட்சி ( DVU) ஆகியவற்றின் வாக்காளர்கள் தற்பொழுதும் அடித்தள மத்தியதரவர்க்கத்தினராகவே உள்ளனர். ஆனால் பழைய பாசிச அமைப்பான தேசிய ஜனநாயகக் கட்சி (NDP) யில் 50% மான தேசியத்தலைமைப் பீடம் தொழிலாளர்களைக் கொண்டிருக்கின்றது. முன்னைய கிழக்கு ஜேர்மனியில் பாசிசத்தாக்குதல்களைச் செய்பவர்கள் இளம் தொழிலாளர்களாகவே இருக்கின்றனர். தொழிலாளர்கள் மத்தியில் அவர்கள் மேலும் ஊடுருவவும் இடமுண்டு. ஆகையினால் இன்றைய நாசிகள் "வர்க்கமற்ற உதிரிகள்" என்று சொல்ல முடியாதுள்ளது.

ஜேர்மன் நாசிகள் தங்களுடைய நேரடியான தாக்குதல்கள் மூலமாக ஒரு இனவாத சூழலை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளனர் என்று சொல்லலாம். அவர்கள் பிற்போக்கு சக்திகளின் முன்னணிப்படை போல இயங்குகின்றனர். இந்த நாசிகளின் பயங்கரவாதம் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக இருந்தது; 1986 ல் இருந்து தற்போதைய அரசாங்கம், தன்னுடைய தவறுகளையும், பின்னடைவுகளையும், சமூகநலத்திட்ட செலவுகளில் ஏற்படுத்திய வெட்டுக்களையும் மறைப்பதற்காக வெளிநாட்டு தஞ்சம் கோருவோருக்கு எதிராக செய்த பிரசாரமேயாகும். அத்துடன் 1992ல் அரசாங்க சேவையாளர்களின் வேலை நிறுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியானது, சம்பளக் குறைப்புக்களுக்கும் சமூகநலத்திட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட வெட்டுக்களுக்கும் எதிராக ஒரு எதிர்ப்பு முன்னணி உருவாவதையும் தடுத்துவிட்டது. இவற்றிற்கும் மேலாக சமூகஜனநாயகவாதிகள் தஞ்சம் கோரும் அகதிகள் சார்பாக எந்த நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறிவிட்டனர் . SPDயின் நவம்பர் 14-15 விசேட மகாநாட்டின் தீர்மானத்திற்கமைய 1992 டிசம்பர் 7இல் அரசியல் யாப்பை மாற்றும் ஒப்பந்தத்திலும் கைசாத்திட்டனர். விசேட மாகாநாட்டின் முன்| SPDயின் சாதாரண அங்கத்தவர்கள் இந்த மாற்றங்களை நிராகரிப்பார்கள் என்பது போலவே தோன்றியது.ஆனால் SPDயின் தலைமைப்பீடம் முக்கியமாக பாராளுமன்ற குழுவின் தலைவர் க்லோசும், கட்சியின் தலைவர் எங்ல்கோமும் விசேட மகாநாட்டில் பெரும்பான்மையைப் பெறுவதற்கான நடவடிக்கைகளில் வெற்றியும் கண்டனர். தலைவர்கள் வாயளவில் சாதாரண அங்கத்தவர்களைத்திருப்திப்படுத்த பாசிச விரோத

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொற் தொடர்களைப் பாவித்துக்கொண்டு,அரசியல் யாப்பை மாற்றுவதில் ஒத்துழைக்கத் தீர்மானித்தனர் SPD யில் உள்ள இடதுசாரிகளின் எதிர்ப்பு பெரிதாக எடுபடவில்லை. SPD யின் இந்த முடிவானது, அரசியல் யாப்பில் தஞ்சம் கோரும் உரிமையை உறுதி செய்யும் 16 வது ஷரத்தை நீக்க வேண்டாம் எனச் செய்யப்பட்ட பெரும் ஊர்வலங்களுக்கு ஒரு பெரும் தோல்வியாகவே இருந்தது. இந்த 16 வது ஷரத்து நீக்கப்படுவதுடன், உருவாக்கப்படும் மற்றைய சட்டங்களும் அரசியல் தஞ்சம் கோரும் உரிமைகளை வெகுவாகப் பாதிக்கும். இந்த மாற்றங்களின் முக்கியமான கருப்பொருளாக ஜேர்மன் அரசாங்கம் பாதுகாப்பான நாடு என்று கருதும் ஒரு நாட்டினூடாக வரும் ஒரு அகதி அந்த நாட்டிற்கே திரும்பி அனுப்பப்படலாம். போலந்து, முன்னைய செக்கோசுலோவாக்கிய ஆகியவை அப்படிப்பட்ட நாடுகளாகக் கருதப்படுகின்றன. ரோமானியாவில் இருந்துவரும் "றோமா " மக்கள் அந்த நாட்டில் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதற்கு தெளிவான சாட்சியங்கள் இருந்தும் கூட. அவர்கள் அந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

SPD யின் நவம்பர்மாத விசேட மகாநாட்டிற்கு முன்பு 150,000 மக்கள்,அதன் தலைமைப்பிடத்தின் மீது அழுத்ததைக் கொடுக்கும் நோக்கத்துடன் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வலத்தை நடத்திய கூட்டணியில் அன்னாக்கிஸ்ட் சுதந்திரக் குழுக்களிலிருந்து SPD இளைஞர் அமைப்பான ஜூஸோ வரை இருந்தனர். இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களில் அதிகமானோர் உயர்தரப்பள்ளி மாணவர்களேயாகும். இந்த ஊர்வலங்களிலும் பார்க்க மொல்னில் நடைபெற்ற கொலைகள் மக்கள் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது கொலை செய்யப்பட்டவர்கள் அகதிகளல்ல. இங்கு பல காலம் வேலை செய்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்- வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள். மறுபுறத்தில் ஜேர்மன் ஆளும் வர்க்கமும் அரசியல் அகதிகளைப் பலிக்கடாக்களாகப்பாவிக்க முயலும் அதே வேளையில் வெளிநாட்டு தொழிலாளர்களை குறைந்த உரிமைகளுடன் வைத்திருக்கவே விரும்புகின்றது. இந்தத் தொழிலாளர்கள் பெருமளவில் வெளியேறுவதையும் அவர்கள் விரும்பவில்லை. "ஒப்பல்" மோட்டார் கம்பனி போன்ற ஸ்தாபனங்கள் முட்டியடித்துக் கொண்டு அவர்களுக்கு உதவ முன் வந்தன. வெளிநாட்டுத் தொழிலாளர்கள் தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கலாம் என்ற பயங்களும் உருவாகின. ஜேர்மனியிலுள்ள அரசியல் விழிப்பு மிக்க தொழிலாளர் வர்க்கமாகவும் அவர்கள் விளங்குகின்றனர். இதனால் வெளிநாட்டுத்தொழிலாளர்களுக்கெதிரான பயங்கரவாதத்திற்கு எதிரான உணர்வுகள் பலமாக இருந்தன.

இந்தக் கொலைகள் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மத்தியில் பயத்தையும் ஆத்திரத்தையும் உருவாக்க இருந்தது. வயோதிபத் தொழிலாளர்கள் அரச பாதுகாப்பு கோரிய பொழுது, இளம் தொழிலாளர்கள் தாம் தமது பாதுகாப்பை உருவாக்கப்போவதாகக் கூறினர். பல துருக்கிய இளைஞர் குழுக்கள் நாசிகளுக்கு எதிராக நடவடிக்கைகளில் இறங்கவும் தயாராகினர். வெளிநாட்டுத் தொழிலாளர்களின் நடவடிக்கைகள் தொழிற்சங்கங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்திருக்கிறது. இனவாதிற்கு எதிராக மே 3 ம் திகதி ஒரு பொது வேலை நிறுத்ததிற்கான நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. டிசம்பர் மாதத்தில் இவற்றைத் தொடர்ந்து பெரும் நகரங்களில் மெழுகு திரிகளை ஏந்தி வரிசையில் மக்கள் நிற்கும் நடவடிக்கைகள் நடைபெற்றன. ஒரு மில்லியனுக்கும் மேலான மக்கள் இந்த "வெளிச்ச வரிசைகளில்" கலந்து கொண்டார்கள். இந்த நடவடிக்கைகளை கிறிஸ்தவ ஆலயங்களும் முதலாளித்துவ சக்திகளும் இணைந்து நடத்தினாலும் மக்கள் மனதில் ஏற்பட்ட ஒரு மாற்றத்தை இது காட்டியது. ஆனால் ஊர்வலங்களின் தன்மையை இவற்றால் உருவாக்க முடியவில்லை. இனவாதத்திற்கு எதிரான உணர்ச்சி பூர்வமான எதிர்ப்பைக் காட்ட மட்டுமே இது உதவியது. இன்று திக்குத் திக்காக நடைபெறும் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை தேசிய ரீதியாக ஒன்றிணைப்பது அவசியமாகிறது. இன்று சீர்திருத்தவாத அமைப்புக்களும் முதலாளித்துவ அமைப்புக்களுமே தேசிய ரீதியாக இணைக்கப்பட்டிருக்கின்றன. இவர்களினால் சாதிக்கக்கூடியது எதுவுமில்லை. முற்போக்கு அணிகள் பகுதியில் பாசிச விரோத அனாக்கிஸ்ட் சுதந்திர இயக்கத்தினரே பெரும்பான்மையினராக இருக்கின்றனர். இவர்கள் தேசிய ரீதியாக அமைப்பாவதற்கு இசைவாகவில்லை.

இனவாதத்திற்கு எதிராகச் செயற்படும் சகல குழுக்களையும் இணைக்கும் ஒரு நாடு பரந்த அமைப்பு இன்று அவசியமாகும் அகதிகள்,வெளிநாட்டவர்கள் ஆகியோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் சுய பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் கூடிய அமைப்பு வடிவங்களும் உருவாக்கப்பட வேண்டும். இனவாதத்திற்கான அடிப்படைக்காரணிகளை அகற்றும் நடவடிக்கைகளும் இவற்றுடன் இணைந்து செயற்பட வேண்டியதும் அவசியமாகும். ஐக்கியப்பட்ட போராட்டமே நாசிகளைத் தோற்கடிக்கும்.

ராஜ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐரோப்பாவில் ஒரு இனசுத்திகரிப்புப் போர்

--- எஸ்.டேவிட்


இரண்டாவது உலக யுத்தத்தின் பின் மாபெரும் இரத்தக் களரி ஒன்று யூக்கோசல்லோவியா உள்நாட்டுப் போரினால் இன்று ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ளது. 30,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பொஸ்னியா குடியரசில் மட்டும் 20 இலட்சம் மக்கள் வீடுகளை இழந்து அகதிகளாயுள்ளனர். இந்தப் போருக்கான காரணங்கள் சிக்கலாக இருந்தாலும், சரித்திர ரீதியாக நோக்குவோமானால் முன்னைய ஸ்டாலினிச ( டிட்டோவின் ) அரசுகள் தேசிய இனப் பிரச்சனைகளையும் பொருளாதாரப் பிரச்சனைகளையும் முழுமையாகத் தீர்க்கத் தவறியதால் ஏற்பட்ட விளைவுகளே இதுவாகும். யூக்கோசல்லோவியா சமஷ்டிக் குடியரசுகள் இன அடிப்படையில் அமைந்திராவிட்டாலும், சரித்திர ரீதியாக உருவாகிய தேசிய இனங்களின் அடிப்படையில் அமைந்திருந்தன. உ+ம்: சேர்பியா, கொறோசியா, மாசிடோனியா. பொஸ்னியாவில் மட்டும் பல இனங்களும் கணிசமாக அளவு வசித்தனர். பெரும் தொகையான முஸ்லிம் மக்களும் இங்கு இருந்தனர்.

1980களிலிருந்து யூக்கோசல்ரேவிய மூலவளங்களை சமஷ்டிக் குடியரசுகளிடையே பகிர்ந்து கொள்வதில் பிரச்சனைகள் உருவாகின. ஏட்டளவில் குடியரசுகளுக்கும் தேசிய இனங்களுக்கும் ( கொஸ்சவோவில் வாழ்ந்த அல்பானியர் தவிர்ந்த ) சம அந்தஸ்து வழங்கப்பட்டிருந்த பொழுதிலும், பொருளாதாரக் குழப்ப நிலமைகளினாலும், உண்மையான பாட்டாளி வர்க்க ஜனநாயகம் பேணப்படாமையினாலும், ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் சர்வதிகாரத்தினாலும், நாட்டின் நிலமைகள் மேலும் சிக்கலாகின. 1989களில் ஸ்டாலினிசத்தின் வீழ்ச்சியும், சோவியத் யூனியனின் சீர் குலைவும் யூக்கோசல்லோவியாவின் தீர்க்கப்படாத சகல பிரச்சனைகளையும் பூதாகரமாக வளர்ச்சியுறச் செய்தன.

இந்தப்பிரச்சனைகளுக்கெல்லாம் மையமாக விளங்குவது, தொழிலாள வர்க்க ஜனநாயகம் இந்த நாடுகளில் அற்றுப் போனதேயாகும். பல்தேசிய, இன, மதப் பிரச்சனைகளை பரந்த சோசலிச ஜனநாயக அமைப்பினூடாகவே தீர்க்க முடியும்.

ஸ்டாலினிச சர்வாதிகர அதிகாரத்துவத்திலிருந்தவர்களே இன்றைய மோதல்களுக்கான காரண கர்தாக்களாகவும் இருக்கின்றார்கள். யூக்கோசல்லோவியாவின் பெரிய குடியரசான சேர்பியாவிலேயே ஸ்டலினிச அதிகாரத்துவத்தின் அரச இயந்திரம்

www.tamilarangam.net





அமைந்திருந்தது. ஸ்டலினிச வீழ்ச்சியின் பின்பு சேர்பிய கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரிகள் தமது புதிய கட்சிக்கு "சோசலிச கட்சி" என பெயர் இட்டுக் கொண்டனர். தலைவனாகத் தெரிவு செய்யப்பட்ட மிலோசிவிச் "அகண்ட சேர்பியா" என்ற கொள்கைகளுடன் தனது ஆக்கிரமிப்புகளை ஆரம்பித்தான். சேர்பியாவுடன் அதிகமான பிரதேசங்களை இணைப்பதே இவர்களின் நோக்கமாக இருந்தது. கொசவோவிலுள்ள அல்பானிய மக்களை ஒடுக்குவதுடன் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகின. சல்வோனிய, குரோசிய அதிகாரத்துவங்களும் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்தினை தமது கைகளில் எடுத்துக் கொண்டன.

ஆகையினால் யூக்கோசலோவியாவின் உள்நாட்டுப் போரானது இனங்களுக்கிடையிலான மோதல் என்று சொல்லாமல், முன்னைய ஆட்சியிலிருந்த அதிகாரத்துவத்தின் பெரும்பான்மையினர் தீர்க்கப்படாத தேசிய இனப்பிரச்சனைகளை தமது நலன்களுக்காகப் பாவிக்க முற்பட்டதனாலேயே ஏற்பட்டது என்று கூறலாம்.

சேர்பிய ராணுவம் கொரசியவை ஆக்கிரமித்த பின்பு கொடூரமான முறையில் இனச் சுத்திகரிப்பில் ஈடுபட்டனர். ஆயிரக் கணக்கான குரோசியர்கள் கொல்லப்பட்டார்கள். பல்லாயிரக் கணக்கானோர் அகதிகளாயினர். பொஸ்னியாவில் முஸ்லீம் மக்கள் மீதும் குரோசியர்கள் மீதும் சொல்ல முடியாதளவிற்கு வன்முறைகள் மேற் கொள்ளப்படுகின்றன. பல காலமாக ஒற்றுமை நிலவிய இந்தப் பல்லினக் குடியரசு சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய நாடுகள் தங்கள் சுயநல நோக்கங்களுடன் தலையீடுகளை மேற் கொண்டன. ஜேர்மன் ஏகாதிபத்தியம் தனது சுயநலன்களுக்காக கொறோசியா மற்றும் ஸ்லோவினியா குடியரசுகளை அங்கிகரித்தது. ஆனால் கொசவோ மற்றும் மசிடோனியா மக்களின் உரிமைகளை அங்கிகரிக்க மறுத்துவிட்டது. இரத்தக்களரியினாலும் பட்டினியாலும் கவலையடைந்த உலக அபிப்பிராயத்திற்காக மனிதாபிமான உதவிகள் என்ற போர்வையிலும் தலையிடுகள் ஆரம்பமாயின, ஆனால் பாதிக்கப்பட்ட பொஸ்னியா மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஆயுதங்கள் பெறுவதற்கு முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளின் சரிந்துவரும் பொருளாதாரங்களினால் பாதிக்கப்படும் மக்களின் கவனங்களை திசைதிருப்ப இந்தப் போர்ச் செய்திகள் பெரிதும் உதவுகின்றன. ஆயுத வியாபாரிகள் கொடுக்க வேண்டியவர்களுக்கு ஆயுதங்களை கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். மக்களின் அவலங்கள் தொடருகின்றன..............................



www.tamilarangam.net

# ஒட்டுத் துணியும் மேலாடையும்

எப்போதெல்லாம் எங்கள்
மேலாடைகள் கந்தலாகிறதோ
அப்பொழுதெல்லாம் நீங்கள்
ஓடி வந்து முழங்குகிறீர்கள்

"இது இனியும் நீடிக்கக் கூடாது"
முடிகின்ற எல்லா வழிகளிலும் உதவி செய்வோம்.
நீங்கள் உற்சாகமாக எஜமானிடம் ஓடுகிறீர்கள்
நாங்கள் காத்துக் கொண்டு இருந்தோம்
நீங்கள் வெற்றிகரமாக
எங்களுக்குப் பெற்று வந்ததைக்
காட்டுகிறீர்கள், ஒரு துண்டுத் துணியை!

நல்லது; துண்டுத் துணி சரிதான்
ஆனால்
முழு ஆடை எங்கே?

எப்பொழுதெல்லாம் பசித்தீயால்
கருகிக் கரைகிறோமோ
அப்பொழுதெல்லாம் ஓடிவந்து
முழங்குகிறீர்கள்.

"இது இனியும் நீடிக்கக் கூடாது"
முடிகின்ற எல்லா வழிகளிலும் உதவி செய்வோம்.
உற்சாகம் நிரம்பியவர்களாய்
நீங்கள் எஜமானிடம் ஓடுகிறீர்கள்;
நாங்களோ,
பசித்தீயில்கருகியபடிகாத்துக் கொண்டிருக்கிறோம்.
நீங்கள்,
திரும்பி வந்து வெற்றிகரமாக
எங்களுக்குப் பெற்று வந்ததைக் காட்டுகிறீர்கள்
நாலு பருக்கைகள்.

நல்லது; பருக்கைகள் சரிதான்
ஆனால் முழுச்சாப்பாடு எங்கே?

எங்கள் தேவை
துண்டுத் துணி அல்ல;
முழு ஆடை.
பருக்கைகள் அல்ல;
முழுச் சாப்பாடு.
ஒரு வேலை மட்டுமல்ல;
முழுத் தொழிற்சாலையும் எங்களுக்குத் தேவை.
நிலக்கரி, தாதுப்பொருள், உலோகக்கனி
அத்தனையும் எங்களுக்குத் தேவை.

எல்லாவற்றையும் விட மேலாக
நாட்டினை ஆளும் அதிகாரமும்
எங்களுக்குத் தேவை.
நல்லது,
இவ்வளவும் எங்களுக்குத் தேவை,
ஆனால்
நீங்கள் கொடுப்பது என்ன ?

- பெட்டோல்ச் பிரக்ட்



www.tamilarangam.net


***A NEW CRISIS erupts in the Middle East, as Israel expels 417 alleged activists from the Islamic fundamentalist organization, Hamas.***

In the first (February) issue of the new 36-page monthly *International Viewpoint*, Lea Tsemel, Dalal Bizri and Manar Hassan go behind the headlines to explain the meaning of the Israeli government's act and the reasons for the rise of Hamas.

There's also Catherine Samary, recently returned from Sarajevo, on the Yugoslav war, David Finkel on Bill Clinton's first steps and François Piguet on the social and political complexities of the crisis in Somalia — and more.

We think *IV* provides a unique resource for those who want to go beyond catchphrases, labels and slogans to understand what British foreign secretary Douglas Hurd has recently described as the "new world disorder". A single trial issue will cost you $4.50 or £3, postage included.

*For a one year subscription (11 issues) to IV*
- *Europe: 280 FF; £32; $48*
- *Rest of world, surface mail: 280 FF; £32; $48*
- *Rest of world, airmail: 360 FF; £40; $60*
- *Send to IV, 2, rue Richard-Lenoir, Montreuil, 93108, France*
- *French francs preferred, Cheques payable to PEC.*

**INTERNATIONAL *VIEWPOINT***

# இன்டர்நார்ஷனல் வியுபொயின்ட்

# INTERNATIONAL *VIEWPOINT*

*சர்வதேச செய்திகளையும் அவற்றின் பின்னணிகளையும் தரும் மாதப் பத்திரிகை.*
*பிரெஞ்சு மொழியிலும் வெளிவருகின்றது.*

*சந்தா விபரம்*

ஜரோப்பா – 280 பிராங்
மற்றைய நாடுகள் (சாதாரணம்) – 280 பிராங்
மற்றைய நாடுகள் (Air mail) – 360 பிராங்

தொடர்புகளுக்கு:

**INTERNATIONAL VIEWPOINT**
**2, rue Richard - Lenoir,**
**93108 Montreuil**
**FRANCE**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்